பதிவு செய்த 2041

உள் நாடு 1 சந்தா
வெளி நாடு 1½ சந்தா

குடி அரசு

வருட சந்தா முன்பணம் ... ரூ 3—0
6 மாத சந்தா ,, ... ரூ 1—12
வெளி நாட்டிற்கு ,, ... ரூ 4—0

வாரப்பிரசுரம்.
ஆசிரியர்: ஈ. வே. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங்குலம் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

கோவை 3 | ஞாயிறு, பிரபவ ஐப்பசி மீ 16உ (29—1—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 40.

இனும்! இனும்
மூணையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனு இனும்.



எங்கள் 18 காரட் சோல்டு கோல்டு பின்புறம்மிகித்திரவே லே செய்யப்பட்டலீவர் பாக்செட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனு இனுமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்திரவாதம். உடனேஎழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

10-வரு உத்தரவாதம்.



விலை ரூ. 20 முதல் ரூ. 100 வரை

மிக்க உயர்தரமானது. நீடித்து உழைக்கக் கூடிய ஸ்வர சுத்தம், சாரவை, கமக்கம், இனிமையுள்ள நாதம் பொருந்திய ஆர்மோனியங்களும், மற்றுமுள்ள சங்கீதக் கருவிகளும் உத்திரவாதத்துடன் குறைந்த விலைக்கு நம்மிடம் கிடைக்கும். முழு விவரங்களடங்கிய கேட்லாக வேண்டுமானால் அனுப்பப்படும்.

பழனி கம்பேனி, கல்கத்தா ஆர்மோனியம் எஜென்சி 411, தங்கசாலை வீதி, சென்னை.

கையில் கட்டும் சோல்டு கோல்டு ஸ்பிரிங் செயினும், பௌண்டன் பேனாவும் இனும்.



நூதனமாக வரவழைத்த எங்களின் 22 காரட் சோல்டு கோல்டு கை கெடியாரம், 5 வருஷம் உத்திரவாதம் புதுமாதிரி பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான காலத்தைக் காட்டும்.
விலை ரூ. 6—8—0. தபால் கூலி வேறு.

லண்டன் வாட்ச் அவுஸ்.
3, பார்க் டவுன், (தா) சென்னை.

"குடி அரசு" நேயர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

நிரூபர்கள் "குடி அரசு" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய கட்டுரைகளையும் செய்திகளையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் காகிதத்தில் ஒருபக்கத்தில் இடது ஓரத்தில் ஒரு அங்குல இடம் (மார்ஜின்) விட்டு வரிகளுக்கு இடையில் குறைந்தது அரை அங்குல இடம் விட்டு எழுதியனுப்புவதுடன் தங்கள் முழுஞாபகத்தையும் தெரியப்படுத்த வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்-

தனிப்பட்ட நபர்களைக்குறித்து அனுப்பப்படும் கண்டனங்களும் ஊர்வம்பு விஷயங்களும் பிரசுரிக்கப்படமாட்டா. பிரசுரிக்கப்படாத விஷயங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

சந்தாதாரர்கள் எழுதும் கடிதங்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதக் கோருகிறோம். சிலர் 2041 என்னும் பத்திரிகையின் (ரிஜிஸ்டர்) நம்பரைச் சந்தா நெம்பராக நினைத்து அந்நெம்பரைக் குறித்து எழுதுகிறார்கள். சந்தா நம்பர் என்பது ஒவ்வொரு விலாசத்துடன் காணப்படும் நம்பரேயாதலால் அந் நம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்வித ஆவலாதியும் கவனிக்கப்படமாட்டாது.

சந்தாதாரர்கள் தங்கள் சந்தா காலரவதியடைவதற்கு முன் அடுத்த வருஷத்திற்கு பத்திரிகை அனுப்பவேண்டாமென்று எழுதாத வரை அடுத்த வருஷத்திற்கும் பத்திரிகை அனுப்பும்படி கேட்டுக்கொண்டதாகவே வைத்துக்கொண்டு பத்திரிகை வி. பி. யில் அனுப்பப்படும். ஆதலால் சந்தா நேயர்களின் சம்மதத்தின் பேரிலேயே அனுப்பியதாக ஏற்பட வி. பி. ஐ கௌரவிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.

நூதன ஜெர்மன் லெக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இருந்த கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. வீசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0. தபால் செலவு 0—8—0.

தி. பான்மி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

இனும்! இனும்!!

சாரவீகே சதாநந்தன் சம்பாஷணை 'கிழவன் குமாரனுன்' இவ்விரண்டு கதைகள் அடங்கிய புத்தகம் தங்கள் விலாசம் தெரிவித்தால் இனாமாக அனுப்புவோம்.

ஸ்ரீ சாது இரத்னவசந்த புத்தகசாலை,
பார்க் டவுன் போஸ்டு, சென்னை.

கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நிட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஜாடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னொன்று மனது சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக சகலையாவது கடிசம் எழுதும்நேரத்தையாவது தெரிவியுங்கள்.

கே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

இலும்! இனும்!! இலும்!!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கோக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப் பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனும்.

ஸ்ரீ கோக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

சிந்தாமணி லேஹியம்.

(அயகாந்த செந்தூரம்)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனனி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொண்டுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அதன் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை ஏராளமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத் தேன் முதலியனவும் உறவாக்கி, கை பாகம், செய்பாகம் தவறாமல் செய்துள்ளோம். ஆகார விஷயத்தில் யாதும் நிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த சீதோஷ்ண நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதலுல் உண்டாகும் குணங்கள்.

1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித்துவிடும்.
2. தளர்ந்து தவண்டு மெதுவுபட்ட இராஜ கருவிகளாகிய சம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இள்ள நத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.
3. மூத்த தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.
4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.
5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.
6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, ஒடுவாதம், அஜீர்ணம் முதலியவையும் காற்றுப்போல் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், நேட்டால் முதலிய பல தேசங்களில் நிகரற்ற தென பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை வக்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் எமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வீ. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்ற நிபந்தனையும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எமது விலாசம்: ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதராஸ்.

தேக ஆரோக்கியத்தைக் கவனியுங்கள்.

குளிர் காலத்தில் தேக ஆரோக்கியத்தைக் காப்பாற்றுவது மிகவும் இன்றியமையாதது. குளிர்கால உபயோகத்திற்கென்றே நானுவிதமான கம்பளிப் போர்வைத் தினுசுகள் ஏராளமாய் ஸ்டாக் செய்திருக்கிறோம். குளிர் காலம் ஆரம்பித்து விட்டதால் ஆர்டர்கள் குவிகின்றன. நீங்களும் உங்கள் ஆர்டரை அனுப்பிவிடுங்கள்

கெ. 1.	ஜெர்மன கம்பிக்கரைப் போர்வை	1	ரூ. 9—8—0
கெ. 2.	பாரின் பூக்கரைப் போர்வை	1	ரூ. 10—8—0
கெ. 3.	மெடி உயர்ந்தது டெரிய சயில்	1	ரூ. 16—0—0
கெ. 4.	காஷ்மீர் கை நெசவுப் போர்வை	1	ரூ. 12—0—0
கெ. 5.	ஜெர்மன் மேகவர்ணப் போர்வை	1	ரூ. 15—0—0

கே. எஸ். முத்தையா அன் கம்பெனி, மதராஸ்

K. S. MUTHIAH & Co, Export Dept., Post Box 99. MADRAS.

ஆநந்த குண போதினி

இரண்டாம் வருடம்.

இது போன்ற ஈவீன மாதாந்தர சஞ்சிகை இது வரை வெளிவாவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளோ யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான். 5000—சந்தாதார்கள்உள்ளது. வருட சந்தா ரூ.1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி இனும். இது பெரிய ஆஃபர். உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு!! புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

மூத்து மாமா.

இரண்டாம்பதிப்பு.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் 4½ அணை ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்

முன் விலை ரூ. 14 இப்போழுதுரூ 7.

22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்

மேற்கண்டபடி எத்தனேப்வேண்டுமானலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இலவசமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ. எழுபட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.

Photo Hand Camera

லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போடோ பிடிக்கலாம். போடோவின் அளவு 3½" x 2½" ஆகும். இந்த மெஷீனை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லாசாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்

ஆதிதிராவிடர்களுக்கு இந்த சமயத்தில் அவசியமான வார்த்தை.

(கைவல்யசாமியார் எழுதுவது).

மனுஷ்ய ஜாதி மனிதவிர்த்தியின் உத்தம தர்மங்களைப் பின்பற்றுகையில் உலகம் விர்த்தியடைகிறது. மனுஷ்ய பொதுஜன உத்தம லக்ஷியங்களைப் பரஷ்செய்வதால் தன்னலம் போய்விடுமென்ற எண்ணத்தால் ஜாதியின் திறமையை வளர்ப்பதாகிய கல்லெஞ்சு சம்பிரதாயம் பலமடைந்தது. இப்பொழுதும் இதற்கு முக்ஞும் நம் நாட்டில் அந்த சம்பிரதாயமே கையேறி நின்றதால் நம் நாட்டில் நீங்கள் தாழ்க்கப் பட்டீர்கள் நேசமும் தாழ்யின. இதனாலேதான், ஜாதிபரவின இடங்களில் ஒரேமாதிரி உயிரற்ற தன்மைகள் காணப்படுகின்றன. ஜாதிகள் வெறும் வலிமைக்காகச் சேர்ந்தக் கூட்டங்களே தவிர வேறில்லை, அந்த ஜாதிக்கட்டுப்பாடு ஜனங்களை அழிக்கிறது. 'சாதி' என்ணம் ஆதிக்கம் பெற்றிருக்கும் தகாங்களனைத்திலும் ஒரேமாதிரி எண்ணமாகவேயிருக்கும். ஜாதி நிபந்தனைகளால் உயர்வடைந்திருக்கும் ஜாதியின் கொடுமைகள் போகவேண்டுமானால் துன்புறும் சாதிகளின் ஜீவசக்தி வெளிப்படவேண்டும். தைரியம் உங்கள் ஜாதியின் இயற்கைக் குணம். ஜீவசக்தி வெளிப்படவேண்டுமானால் அறிவு வேண்டும். அறிவிற்கு கல்வி கேள்வி அவசியம். கல்வியும் கேள்வியும் வந்தால் உலக அனுபோகமும் ஆசையும் வரும். அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு உலகத்தில் அதிகாரமுடையவன் கிழேகமோ, அவனைக் கட்டுப்படுத்தும் திறமையோ வேண்டும். அதிகார முடையவர்களெல்லாம் ராஜாங்கத்தின் ஆதிக்கத்தில் கட்டுப்பட்டவர்கள். அந்த ராஜாங்கம்தான் நம் திறமைக்குத் தகுந்த ஆசையின் பூர்த்தியை நிறைவேற்றிக் கொடுக்க ஒரு சபையை அனுப்புகிறது. அந்த சபைதான் ராயல்கமிஷன்.

அந்த ராயல் கமிஷனை காங்கிரஸ் பகிஷ்கரிக்க வேண்டுமென்கிறது. உங்கள் சங்கம் கமிஷனை ஆதரித்து கல்வரவு கூற வேண்டுமென்கிறது. இரண்டிற்கும் மத்தியிலுள்ள கட்சிகள், இப்படியும் அப்படியுமிருக்கின்றன. காங்கிரஸ்காரர்கள், கமிஷனை ஏன் பகிஷ்கரிக்கச் சொல்லுகிறார்கள்? எவ்வளவு தூரம் பகிஷ்காரச் செயலை செய்கையில் காட்டி தியாகத்திற்கு எவ்வளவு தூரம் தயாராயிருக்கிறார்கள்? கமிஷனுக்கும் இவர்களுக்கும் இப்பொழுதிருந்தே உண்டாயிருக்கும் வேதாடர்பு, இவர்களுடைய சமூகம் பின்னலிருந்து செய்துவரும் ஏற்பாடு, இத்தனையும் "குடி அரசு" விபரமாக எடுத்துச்சொல்லி வருகிறது. அவை நம்மனதிலு மிருக்கின்றன. பகிஷ்கரித்தும், இல்லாமலும், எந்த நன்மை வந்தாலும், உங்களை எந்த கட்சியும் மறந்துவிடுவது நிச்சயமென்று நீங்கள் உணர்ந்ததினால், ராயல் கமிஷனை வரவேற்று உங்களுடைய நன்மை தீமைகளை நீங்களே நேரில் யேற்றுக்கொள்ள தீர்மானம் பண்ணி ராயல் கமிஷனை வரவேற்க உங்கள் சங்கம் செய்த தீர்மானத்தை உங்கள தலைவருடன் ஒத்து அதை நிறைவேற்றி நன்மையடைவதற்காகவே உங்களுக்குச் சில வார்த்தை சொல்ல வந்தேன்.

எல்லாருக்கும் நம்புதல் கஷ்டமாகத் தோன்றினாலும் யதார்த்தமாகவே பூமியில் ஒரு பிரதேசத்தில் மகத்தான பிரிடிஷ் ஜாதியென்று நியாயப் பெயர் பூண்ட ஜாதி ஒன்று வாஸம்செய்கிறதென்பதை நீங்கள் நம்பவேண்டும். அநேக விதங்களில் அந்த ஆங்கிலேயர்கள் உண்மையானவர்கள் முன்னேக்கமுடையவர்கள் என்பது உங்களுக்கு அனுபோகம். பெரிய சாதியாருக்கு மகிமைதக்க குணப்பெருமையே, இவர்களுக்கும் மகிமை தருவதல்லாது கேவலம் வாள் வலியாலும் அல்லது பணப்பலத்தாலும் குவித்த திரளும் ஜனப் பெருமையான நிலைமைக்கு மட்டுமிட்டார்கள் என்று சொல்லுவது சரியல்ல. சண்டை, பணம்சேர்க்கும் தொழிலில் மாத்திரமே வலிமைகொண்டு மகிமைபெற்ற ஜாதியார் உலகிலில்லை. தர்ம மகிமையாலேதான் சாதி மகிமையுண்டாகிறது. அந்த தர்மம் நம் தேசத்தில் ஓங்கியிருந்த காலத்திலேதான் நம் நாடு சிறப்புற்று விளங்கி, இந்த தர்மத்தை பிர்ம்மதேவன் மனிதனின் அபிவிர்த்திக்காகவே திருவுடித்தார் என்றும், அதை அனுசரிக்காத ராஜாக்களும், ஏழைகளும், அழிந்துபோகுமென்றும் இந்த சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒழுக்கம்கெட்ட பாப்பானுக்கு கொடுத்தாலே, எல்லா மேன்மையும் வந்துவிடுமென்று ஆராய்ச்சியில்லாதவன் நினைத்துக்கொண்டிருக்கிறானே ஒழிய சாஸ்திரத்திலில்லை.

நியாயம், உண்மை, விடுதலை என்ற ஆசர்யங்களை பெரிய அங்கிலேயர்கள் யதார்த்தமாக நம்புகிறவர்களானபடியாலும், உங்களுடைய குறைகளை கமிஷன் விசாரிக்கும் என்று இந்தியா மந்திரி உறுதி கூறியிருக்கிறபடியாலும், நீங்கள் உங்கள் தலைவர்களோ அவர்களிடம் அனுப்பி உங்கள் குறைகளை சாஸ்தி மூலியமாகவும் எழுத்து மூலமாகவும் நேரிலும் சொல்லவேண்டும். வெள்ளைக்காரர்களிடம் பேசுவதற்கு உங்களுக்குக் கிடைக்கும் சமயம்போல் மற்றவர்க்கில்லை. வெள்ளைக்காரர்களிடமிருக்கும் ஒரு குணஸ்தா சமயம் வந்தால் தனது சமூகத்திற்கு வேண்டிய காரியங்களை வெள்ளைக்காரன் காதில் போட்டு விடுவிருன். வெள்ளைக்காரர்களுக்கு சரியாக அவர்கள் மண்டையில் படும்படியாகச் சொல்லிவிட்டால் அதை முடிக்கும் திறமுடையவர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். வெள்ளைக்காரிடம் அதிகமாழகப்பழகும் கூட்டத்தார் நீங்கள் தானே. இத்தனை காலமாக உங்கள் சந்ததிகளுக்கு எவ்வளவோ நன்மைகள் செய்திருக்கலாம். அந்த இடத்தில் அதிகம் தவறிவிட்டீர்கள். போனது போகட்டும். இனி உங்கள் காரியங்களை நீங்களே கவனிக்கவேண்டும். நீங்கள் எந்த விதத்திலாவது முன்னுக்கு வந்துவிட்டீர்களானால் எல்லாரும் மரியாதை செய்வார்கள். வெள்ளைக்காரன் தயவாலே தான் அநேகர் பெரியபதவிகளுக்கு வந்தார்கள். இப்பொழுதும் அதை உத்தேசித்தே பங்களாவைச் சுற்றுவது உங்களுக்குத் தெரிந்ததே. நீங்கள் தைரியமாய் உங்கள் துன்பங்களை ஆங்காங்குள்ள வெள்ளைக்காரனிடம் ஆங்காங்குள்ளவர்கள் எடுத்துச் சொல்லுங்கள். சொல்லவேண்டிய விஷயஞானப் பழக்கம் வருவதற்கு சங்கம் சேர்ந்து உலக சமாச்சாரம், உங்கள் உரிமைகளை மற்றவர்கள் அபகரிப்பது, அழிப்பது தடுப்பது இத்தனையும் வெளிப்படுத்தி உங்கள் சமூகங்கள் தெரிந்துகொள்ளும்படியாய் பட்டணங்களில் வாரத்திற்கோ மாதத்திற்கோ ஒரு முறை ஒன்றுகூடிப் பேசுங்கள். ஒவ்வொருவரும் தங்களுக்கு சந்திக்க முடிந்த வெள்ளைக்காரரிடம் ராஜாங்கக் குறைகளையும் சமூகக் குறைவுகளையும் எடுத்துப்பேசித் தெரிந்து கொள்ளட்டும். அப்பொழுது யாவரும் உங்களை யறியாமல் எந்த வெள்ளைக்காரனிடமும் பேசிப்போக முடியாது. உங்கள் துன்பங்கள் வெள்ளைக்காரர்களுக்குத் தெரிந்திருந்தாலும் உங்கள் அடிமைத் தன்மையால் அவர்கள் புத்தியில் பதியவில்லை. உங்களுடைய ஆத்திரத்தையும் அவசியத்தையும் அவர்களிடம காட்டிவந்தால் தானுகவே உங்கள் வார்த்தைகளை அவர்கள் மதித்தே தீரும்படியான நிர்ப்பந்தத்திற்கு அவர்கள் வந்து விடுவார்கள்.

முன் வந்த சீர் திருத்தத்தின் அனுபோகத்தைக்காண்பதே இப்பொழுது வரும் கமிஷனின் முக்கியவேலை என்று சொல்லப்படுகிறது. முன் கிடைத்த சீர் திருத்தத்தால் உங்களுக்கு ஒன்றும் கிடைக்காததைச் சொல்லுங்கள். ஆங்லேய அரசாட்சி ஏற்பட்டு 150 வருடமாகியும், மகாராணியின் சாசனம் வந்து 50 வருடமாகியும், மாண்டேகு சீர்திருத்தம் வந்து பத்து வருடமாகியும் பொது ரஸ்தாவில் நடப்பதற்குக் கூட உங்களை விடாமல் தடுக்க பிறவியிலேயே உயர்ச்சவர்கள் என்று நினைத்துக்கொண்டிருக்கும் சாதியாரிடம் 144 வது சட்டத்தைக் கொடுத்து வைத்திருக்கும் கவர்மெண்டைப் பற்றி கமிஷனிடம் சொல்லுங்கள். பூர்வீகத்தில் தேசம் யாருடையதோ அவர்களுக்கே அந்ததேசத்தின் பாத்தியதைகளோ கொடுப்பதே வெள்ளைக்கார நாகரீகமாயிருக்கும் கதை அனைத்துமிருக்கின்றன. நீங்கள் பூர்வீக இந்துக்களானாலும் சரி, ஆதிதிராவிடர்களானாலும் சரி பூர்வீக குடிகள் என்பதை எந்தச் சரித்திரக்காரர்களும் மறுக்க வில்லை. ஆனதால் உங்கள் தேசத்திலுள்ள ராஜீய உத்தியோகம், ஊர், குடித்தனம், மதம் இவைகளிலுள்ள பாத்தியதைகளைப் பெற உரிமையுண்டு.

புருஷனை பெண்ஜாதி எதிர்கொண்டழைப்பதுபோல் பம்பாய் துறைமுகத்தில் உங்களால் அழைக்கப்படும் வெள்ளைக்காரர்களிடம், நீங்கள் அவர்கட்கு இந்த தேசத்தில் செய்த நன்மைகளை எடுத்துக்காட்டுங்கள். இந்தியாவில் சென்னைதான் வெள்ளைக்காரர்களுக்கு முதல் முதல் ஆள் கொடுத்து உதவினது என்னும் பெயர் உங்களால் ஏற்பட்டதென்று அவர்கட்கு எடுத்துக் காட்டுங்கள் ஆற்காட்டு முற்றுகையில் கஞ்சியைக் குடித்து சோற்றை வெள்ளைக்காரர்களுக்கு கொடுத்தவர்கள் நீங்கள் என்பதை அவர்கள் அறியட்டும். ஐரோப்பியா யுத்தத்தில் வெள்ளைக்காரர்களுக்கு உபசரணை செய்தவர்களும், மெஸபடோமியாவில் உயிர்விட்டவர்களும் நீங்கள் என்பதை அவர்கள் அறியச் சொல்லுங்கள். அவர்களைப் போஷிப்பதும் அவர்கள் குழந்தைகளை வளர்ப்பதும் நீங்களே என்பதை அவர்களுக்கு ஞாபகப் படுத்துங்கள். அவர்களுடைய பாட்டன் முப்பாட்டன் உங்களைப் பற்றி சொன்ன கதைகள் அப்பொழுது அவர்கள் ஞாபகத்திற்கு வரும். இந்தியாவில் முப்பது வருடம் தலைவலி வராமல் உத்தியோகம் செய்ததற்கு என்னுடைய பொட்லர் காரணமென்று பிரசங்கம் செய்த வெள்ளைக்காரர்களின் ஞாபகம் வரும்; இத்தனையும் சொல்லி அவர்கள் கவனிக்காமலோ எமாற்றியோ விட்டால் காங்கிரஸ் காரர்கள் சொல்லும் பகிஷ்கார எமாற்றம் படமுறுத்தலும் போலல்லாமலும், மற்றவர்கள சொல்லும் சமயோசித வார்த்தையைப் போலல்லாமலும், தைரியமாய் நாங்களும் உங்களைப் பகிஷ்கரிப்போம் என்று சொல்லுங்கள். ஆனால் காங்கிரஸ்காரர்கள் கமிஷன் விருத்தை பரிஷ்கரித்தாலும் அவர்கள் பந்து கிநேகிதக் கூட்டங்கள் அந்த விருத்தில் எச்சில் பொறுக்கிக்கொண்டிருப்பார்கள். அதனால் உங்களுக்கு யாதொருவித நஷ்டமுமில்லை. எங்கள் பகிஷ்காரம் விருத்தில் சமயலே பண்ணமாட்டோம் என்று சொல்லிவிடுங்கள். மிரட்டுகிறவர்கட்கும், வாயாடிகளுக்கும், வெள்ளைக்கார நாகரீகத்தில் இடம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் உங்கள் பகிஷ்காரத்தை வெள்ளைக்கார நாகரீகம் மரியாதை செய்தே தீரவேண்டும். ஒரு கமீஷன் போய் மறு கமீஷன் வருவதற்குச் சில நாள் செல்லும், உங்களுக்கு உரிமை கொடுக்காவிட்டாலும், கொடுத்ததை ஒவ்வொரு ஜில்லா கலெக்டர்களும சரியாய் நடத்துவருகிறதா என்று மேல்பார்வை பார்க்காவிட்டாலும், நீங்களுய் தயா

இதன் தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க

ஞானசூரியன்.

"ஞானசூரியன்" என்ற புத்தகம் காலடு காத்தான் திருவாளர் வயிசு. ஷண்முகம் செட்டியார் அவர்களின் வேண்டு கோளின் பேரில் சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களால் எழுதப்பட்டது. இது முழுதும் ஆரியர்களின் வேதம், சாஸ்திரம், புராணம், சாஸ்தி என்பவைகளின் புரட்டுகளை வெளியாக்கும் கருத்துக்கொண்டே எழுதப்பட்டதாகும். இதில், பெரும்பாலும் வேஷத்திலும் மற்றும் பல ஆரிய ஆதாரங்களிலும் உள்ள சுலோகங்களை எடுத்தெழுதி அவைகளுக்குவற்பட்ட பொருள்களையும் எழுதி அப்படி ஏன் அவர்கள் எழுதி வைத்துக் கொண்டு நம்மை நம்பச் செய்து வருகிறார்கள் என்பதற்கு உள்ள அவ்வாரியர்களின் சூழ்ச்சியும் கெட்ட எண்ணமும் சுயநலமும் பளிங்கு போல் வெளியாக்கப் பட்டிருக்கின்றன. இவ்வுரைகளை மெய்ப்பிக்க ஞான சூரியன் என்னும் இப்புத்தகத்திற்கு அபிப்பிராயம் கொடுத்த பல அறிஞர்களில் சிலராகிய திருவாளர்கள் சுவாமி வேதாசலம், கா சுப்பிரமணிய பிள்ளை, வி. ஒ. சிதம்பரம் பிள்ளை, மூத்த நாடார், ஈ வெ. ராமசாமி நாயக்கர் ஆகியோர்களின் அபிப்பிராயங்களும திருவாளர் கண்ணப்பர் அவர்களின் முகவுரையுமே போதுமானதாகும். எனவே சற்று தயவும் பொறுமையும் கூர்ந்து இவற்றை நோக்குவார்களானால் இப்புத்தகத்தின் தன்மையும் அதனால் தமிழ் மக்களுக்கு ஏற்படும் பயனும் தானாகவே விளங்கும்.

'ஞானசாகரம்' பத்திராதிபர்,
சுவாமி வேதாசலம் அவர்கள்
எழுதுவதின் சாரம்:—

வடமொழிப் பழைய நூல்களை நன்கு பயின்றறியமாட்டாமல், ஆரியப்பார்ப்பனர் அவற்றை உயர்த்துரைக்கும் மயக்குரைகளில் வீழ்ந்து அவற்றைக் குருட்டுத்தனமாய்ப் பாராட்டிக் கொண்டிருக்கும் நம் தமிழ் மக்களின் அம்மயக்கத்தை ஒட்டி வடநூல்களின் ஊழலும், அவற்றின் கண் தமிழ் மக்களைப் பாழாக்குதற்குப் பார்ப்பனர் எழுதிவைத்திருக்கும் பொய் மாயப்புரட்டுகளும் நன்கு விளங்கக் காட்டுந்திறத்தது, இஞ் ஞான சூரியன் என்னும் நூல் என்பதில் ஓர் எட்டுணையும் ஐயமில்லை. வடநூல்களிலிருந்து இதன்கண் எடுத்துக்காட்டியிருக்கும் மேற்கோள்களும் அவற்றிற் கெழுதியிருக்கும் தமிழுரைகளும் முற்றிலும் உண்மை யென்பதில் ஐயமில்லை. இந்நூல் உண்மைப் பொருள் வாய்ந்தது. பல்லாவரம். 7-10-27.

திருவாளர் கா. சுப்பிரமணியபிள்ளை
M. A. M. L. Advocate
அவர்கள் எழுதுவதின் சுருக்கம்:—

தமிழ் மக்கள் இப்பொழுதுள்ள வடமொழி வேதாகமங்கள் இன்னதன்மையனவென அறிந்து கொள்ளுவதற்கு இந்நூல் பெரியதோர் ஒளிகாட்டியாக நிழ்கின்றது.....ஆரியப் பார்ப்பனவலியினின்று நம்மவர்கள் விடுதலை அடைவதற்கு இந்நூல் தலை சிறந்ததொரு கருவியாகு மென்று நான் மகிழ்கின்றேன். சென்னை. 24-10-1927.

'நாடார்குலமித்திரன்' பத்திராதிபர்
திருவாளர் சு. ஆ. முத்துநாடார்
அவர்கள் எழுதுவது:—

* * பொல்லாப் புரோகிதர்கள் கொடுமை வாய்ப்பட்டு ஆடிமை வாழ்க்கையிலிருக்கும் நாட்டை விடுதலை மார்க்கத்திற் கொண்டு சேர்க்கக் கூடிய ஞான சூரியனை நந்தமிழ்நாடு நன்றியுடன் வரவேற்கும்.

இன்னும் இக்கிய நாட்டைப்பற்றி மிக இழிவுபட ஓர் நூல் எழுதிய அமெரிக்க சேசத்து மேயோ என்ற மாது போன்ற பலஆரியமேயோக்கள் எழுதி வைத்திருக்கும் குப்பை வேதக்களையும் சாக்கிடை சாஸ்திரங்களையும், சுட்டுப்பொசுக்கி மக்கள் மனமயக்கத்தைத் தீர்க்கும் வழி திறக்கப்படுவதற்கு பல ஞான சூரியர்கள் உதயமாக வேண்டும்.

வேதம், வேதம் என்று பன்னூற்றாண்டுகளாக மக்களை மோசம் பண்ணி வந்த—வருகிற பாதகத்தை பகுபாதமின்றி, வெளியிட்ட சிவானந்த சுவாமிகளுக்கும் அச்சுவாகன மேற்ற அன்புடன் பொருளுதவி செய்த ஸ்ரீமான் வயிசு ஷண்முகஞ் செட்டியாரவர்களுக்கும் நம்மனப்பூர்வமான வந்தனத்தைச் செலுத்துகிறோம்.

ஈரோடு "குடி அரசு" பத்திரிகை
எழுதுவதாவது.—

இப்புத்தகமானது தமிழ்நாட்டு மக்கள் அவசியம் படித்துப்பார்க்க வேண்டியவைகளில் ஒன்று என்றே சொல்வோம். இதைப்படித்துப் பார்த்தால் வேதம் என்று சொல்வதில் உள்ள ஆபாசங்கள் வெளியாவதுடன் வேதத்தை ஒரு வகுப்பார் தவிர மற்ற வகுப்பார் படிக்கக் கூடாது என்று ஆதியிலிருந்தே பார்ப்பனர்கள் ஏன் சூழ்ச்சிசெய்து வந்திருக்கிறார்கள் என்பதும் நன்றாய் விளங்கும்.

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமியவர்கள் வேதத்திலுள்ள சுலோகங்களையும், மற்றும் வேதத்தை ஆதாரமாகக் கொண்ட சமஸ்கிருத நீதி நூல்கள் என்பவைகளிலுள்ள சுலோகங்களையும் எடுத்து எழுதி அதற்கு அர்த்தம் எழுதியிருப்பதுடன், ஆரியர்களான பார்ப்பனர்களின் சுயநலத்தையும், அநாகரீகத்தையும், அவர்களது காட்டு மிராண்டித் தனத்தையும் நன்றாய் விளக்கியிருக்கின்றார்

இப்புத்தகத்தை ஒரு தடவை வாசித்துப் பார்த்தவன், நேருக்கு நேரே விமானம் வந்ததன்னைக் கூட்டோடு; மோக்ஷலோகத்திற்கு அழைத்துக் கொண்டு போவதாலும், தான் இந்து வென்றே வேதத்தையும் ஸ்மிருதிகளையும நம்புபவன் என்றே சொல்லிக் கொள்ள கடுகளவும் சம்மதிக்கமாட்டான்

எனவே உண்மையான தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இப்புத்தகத்தை ஒரு தடவை படித்துப் பார்க்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறோம்

"திராவிடன்" பத்திராதிபர்
ஸ்ரீமான் கண்ணப்பரின்

முன்னுரை.

"சத்தியமின்றித் தனிஞானத்தானின்றி
யொத்த விடயம் விட்டோரும் உணர் வின்றி
பத்தியுமின்றிப் பரனுண்மையின்றி யூண்
பித்தேறும் மூடர் பிராமணர் தாமன்றே"
(நீருமூலர்.)

"காமார்க்குங்குடியல்லோம்" என்று வீர முழக்கம்செய்த நம் தமிழ்நாடு இன்று அடிமைப்பெருங் குழியில் அமிழ்ந்து கிடக்கின்றது. அன்பு அருள் அறம் முதலியவைகட்கு நிலைக்களனாயிலவிய நம் தமிழ்நாடு அந்தோ மறத்துக்கு அடிமையாய் கிடக்கின்றது. சமத்துவம், சகோதரத்துவம், செங்கோலோச்சிய இச்செந்தமிழ் நாட்டில் இப்பொழுது சாதிப் பேய், சமயப்பேய் தலைவிரித்து ஆடுகின்றன. இத்தகைய வீழ்ச்சியை தமிழ்நாடு உற்றதற்கு காரணமென்ன? இந்நாடு, தாமே கடவுள் என்றிடும் பாதகத்தவராய பார்ப்பனர்கள் சூழ்ச்சிக்கும், அவர்கள் மதமாய பிராமண மதத்துக்கும், 'கொலையறமாமெனும்' அவர்கள் வேதங்கட்கும், ஒரு குலத்துக்கு ஒரு நீதி யுரைக்கும் அவர்கள் மனு அசருமக்கட்கும் இடங் கொடுத்துவிட்டது. இதனால் தமிழ்மக்களுள் பெரும்பான்மையோர் பார்ப்பன மக்களிடம் மதிமயங்கி அறிவிழந்து கிடக்கின்றார்கள். இவ்வறியாமையின் காரணமாய்த்தான் பார்ப்பனர்சட்டுச் சாத்திரங்கள் கட்டுவதும், அவர்கள் பெண்டு பிள்ளைகளுக்கு வயிறு புடைக்க சாப்பாடிடுவதும்தான்சிறந்தசறமென்றுநம்மவர்கள் கருதுகின்றார்கள். இம்மூட அறிவு தமிழ்நாட்டை விட்டு என்று பறந்தோடுகின்றதோ அன்று தான் நந்நாடுவிடுதலையடையமுடியும்? இம்மூட அறிவை பறக்கடிக்கச்செய்வதுஎப்படி? ஒரு கணிகையின்காமவலையில் அகப்பட்டுக்கிடக்கு மொருவனை மீட்க வேண்டுமாயின், அவனுக்கு காம கணிகையரின் கொடுமைகளை எடுத்துரைக்க வேண்டும். காமக் கிழத்தியுடன் ஒழுகும்படிற்றொழுக்கத்தால் நேரும் தீமைகளைத் தெளிவுபடுத்திக் காட்ட வேண்டும். இவ்வாறு செய்தால் அவனை மீட்டு வரலாம். அத்தன்மைக்தே பார்ப்பன மதத்துக்கு அடிமைப்பட்டுக்கிடந்தழலும் நம்மக்களை கரையேற்ற வேண்டுமாயின் பார்ப்பனர்களின் கொடுமைகளை எடுத்துரைக்க வேண்டும். அவர்களின் வேதங்கள் புராணங்கள், மனுநூல்கள் முதலியவைகளின் மோசங்களை வேட்ட வெளிச்ச மாக்க வேண்டும். அம்மட்டோ! அக்கொடிய பார்ப்பனர்கள் 'நாம் படிக்கக்கூடாது. படிப்பதை கேட்கக்கூடாது, அவ்வாறு மீறிப் படித்தால் சுயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும்' என்று எழுதியிருப்பதையும் நாம் எல்லோரும் படிப்பகற்காக புத்தர் பெருமானால் "நாலந்தா" என்ற இடத்தில் நிலை நாட்டப்பட்ட எழு மாடமாளிகைகளுடன் கூடிய ஒரு பல்கலைக்கழகத்தை தீயிட்டுக் கொழுத்தியகொடுஞ் செய்கையையும் எடுத்துரைக்க வேண்டும். இவ்வாறு செய்தால் நம் மக்களைப் பிடித்திருக்கும் பார்ப்பன மயக்கமென்ற இருள் பறந்தோடிவிடும். இருள் போக்க வேண்டுமெனின், வெளிச்சம் இன்றியமையாதது. ஆகையினால்தான் பார்ப்பன இருளை போக்கடிக்கும் "ஞான சூரியன்" என்ற இவ்வரும்பெரும் நூலை ஒவ்வொருவரும் படித்தல் வேண்டும். படித்து அதன்படி ஒழுகினால் அடிமையாயிருக்கும் நம் தமிழ்நாடு விடுதலைபெற்றுவிடும். இந்நூலாசிரியர் சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்கட்கும் இந்நூலை வெளியிட்ட திருவாளர் வயிசு சண்முகம் செட்டியாரவர்கட்கும் நம் தமிழுலகம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டதாகும். சென்னை 14-7-27.

ஆகவே தமிழ் மக்கள் ஒவ்வொரு வரும் இதனை அவசியம் வாங்கப் படிக்க வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வியாபார நோக்கத்துடனேயோ பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடனேயோ இது வெளியாக்கப்பட்டதல்ல வென்பதையும் மக்களின் விடுதலையையே கருதி வெளியிடப்பட்டிருக்கின்றது என்பதையும் அன்பர்கள் உணர்வார்களாக.

இதன் விலை ரூ 1—0—0 தபால்கூலி வேறு

கிடைக்குமிடம் } வயிசு. ஷண்முகம் செட்டியார்,
காளுடுகாத்தான்,
ராமனாதபுரம்ஜில்லா.

அரசியல் கமிஷன் பகிஷ்காரப்புரட்டு.

கும்பலோடு கோவிந்தா எதற்கு? பத்திரிகை விளம்பரத்திற்கா?

இப்பொழுது நமது நாடெங்கும் பெரிய கிளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. அரசியல் பகிஷ்காரம், பகிஷ்காரம் என்று எல்லோரும் கூக்குரலிட்டு வருகின்றனர். மிஸ் மேயோவை இதுவரையில் எல்லோரும் தூற்றி வந்தனர். இக்கமிஷன் வந்த பின் இதைத்தூற்ற ஆரம்பித்து விட்டனர். பிரிட்டிஷ் பார்லிமெண்டார் இந்தக்கமிஷனில் இந்தியர்களைச் சேர்க்காததால் இந்தியர்கள் எல்லோரும் சுயமரியாதையை இழந்து விட்டார்களாம். இந்தியா பங்கம் அடைந்து விட்டதாம். இதுதான் நம் நாட்டின் தற்போதைய ஆவாரம். மகாத்மா காந்தியின் ஒற்றுமையாமை போய் விட்டது. நிர்மாண திட்டங்கள் பறந்து விட்டன. சட்ட சபை பகிஷ்காரம் தொலைந்து விட்டது. எல்லாவற்றையும் நசுக்கிய பின்னர் அதற்குக் காரணமாக விருந்தவர்களெல்லோரும் இந்தப் பகிஷ்கார இயக்கத்தில் கலந்து கொண்டார்கள்.

ஒரு இயக்கத்தின் தலைவர்களைக் கொண்டோ அல்லது அதில் சேர்ந்து ஆதரிக்கும் மற்றவர்களைக் கொண்டோ இயக்கத்தின் உண்மையை மூளையுள்ள எவரும் சுலபமாகத் தெரிந்து கொண்டு விடலாம். இது காலே பகிஷ்கார இயக்கத்தில் கலந்து கொண்டிருப்பவர்கள் 'சுயராஜ்யக் கட்சியார், மிதவாதிகள், ஜஸ்டிஸ் கட்சியில் ஒரு சிலர் சுயராஜ்யக் கட்சியார் மகாத்மா காந்தியின் ஒத்துழையாமையை நசுக்கி சட்ட சபைக்குச் சென்று முட்டுக்கடை போட்டு அரசாங்கத்தை நடத்தும்படி செய்யப்போவதாக ஜனங்களை ஏமாற்றி வாக்குப்பெற்றுச் சென்றவர்கள் மந்திரிப் பதவி கிடைத்தால் போதும் என்று நினைத்துக்கொண்டிருப்பவர்கள் காங்கிரஸ் வந்து எப்படியாவது உத்தியோகம் ஏற்றுக்கொள்ளலாம் என்ற தீர்மானம் நிறைவேறினால் போதும் என்ற மனப்பான்மை கொண்டவர்கள் அரசியல் கமிஷனில் இந்தியர்களைச் சேர்க்காதது பற்றி வருந்துவது இயற்கை தான். ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்காரைப்போன்று ஒன்று அல்லது இரண்டு சுயராஜ்யக் கட்சித் தலைவர்களென்போரை நியமித்திருந்தால் ஸ்ரீ அய்யங்காருக்கோ அவரைச் சேர்ந்த கூட்டத்திற்கோ இவ்வளவு கோபம் வந்திருக்காது. ஸ்ரீமான் அய்யங்காருக்கு காங்கிரஸ் தலைவர் பதவி கிடைத்து விட்டது. சுயராஜ்யக்கட்சியின் ஆக்டிங் லீடர் ஸ்ரீமான்களான சத்திய மூர்த்தி, வ. ரங்கசாமி அய்யங்கார், முத்துரங்க முதலியார், பி. வரதராஜுலு நாயுடு, பெரியார். அண்ணாமலைப் பிள்ளை, அ. குப்புசாமி முதலியார் போன்ற மாபெருந்தலைவர்களை நியாக மூர்த்திகளை தமது கையில் வைத்திருப்பவர் என்று பிரிட்டிஷ் பார்லி மெண்டாருக்குத் தெரிந்திருந்தும் அவரை நியமனம் செய்யாது அவமானப்படுத்தியதானது பெரும் குற்றமாகும். அவருடைய நிலைமையில் வேறு எவரேனும் இருந்திருந்தால் பகிஷ்காரம் ஹார்த்தால் இரண்டோடன் நின்று விடமாட்டார்கள். இவ்விதமாக ஒரு தலைவரை அவமானப் படுத்தியதற்காக பிரிட்டிஷ் பார்லிமெண்டார் மீது மானநஷ்ட தாவா கண்டிப்பாகப் போட்டிருப்பார்கள். ஸ்ரீமான் அய்யங்கார் பொறுமை சாலி ஆனதால் இத்துடன் நின்று கத்தி வருகிறார்.

மேலே போன ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களில் சிலர் பகிஷ்காரத்திற்கு உள்ளிருந்து ஆகாவு கொடுத்து வருகிறார்கள். ஜஸ்டிஸ் கட்சியாரின் நிலைமையைப்பற்றி அதிகம் விவரிக்க எனக்குமனமில்லை.

மூன்றாவதாக மிதவாதிகளைத்துக்கொள்ளவேண்டும். சர். டேஜ் பகதூர் சாப்ரு சர் அலி இமாம், சிந்தாமணி, சிவசாமி அய்யர் ஆகிய சகோதரர்கள் தமக்குக் கண்டிப்பாக சாயல் கமிஷனில் ஸ்தானம் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்தார்கள். அரசாங்கத்தாருடன் எப்பொழுதும் ஒத்துழைத்தும், பல விதமான நன்மைகள் செய்தும் கடைசியில் இலவு காத்த கிளியைப்போலானால் அவர்களது நெஞ்சம் பதறுவது இயற்கைக்கு மாறுபாடானதல்ல. அவர்கள் பகிஷ்கார இயக்கத்தில் கலந்து கொள்ளுவது இயற்கைதான். ஆனால் எல்லாக்கட்சியினரும் தமது சுயநலத்தினால் தேச ஜனங்களையே ஏமாற்ற முயற்சித்து வருவதைப் பார்க்க எனக்கு வேடிக்கையாக விருக்கிறது.

தேச ஜனங்களுக்கு பெருத்த தீங்கு நேர்ந்து விட்டது நமது தேசீய முழுகி விட்டது என்று ஆர்ப்பாட்டம் செய்து வருவது பொது மக்கள் மூளையற்றவர்களென்று எண்ணிச் செய்யும் காரியமாக விருக்கிறது. பிரிட்டிஷ் பார்லிமெண்டார் இவர்களைப் பிரதி நிதிகளாக நியமிக்காதது பெருத்த அவமானமாகி விட்ட தாம் மானமழிந்து வாழாமை முன்னினதே என்ற தீர்மானத்திற்கு வந்திருக்கும் இம்மேதாவிகள் பஞ்சாப் படுகொலையின் காலத்தில் அரசாங்கத்திற்கு தாசர்களாய் நின்று அரசாங்கத்தை வாழ்த்தியவர்கள். நமது குழந்தைகள் குண்டு வாய்ப்பட்டு இறக்க, பெண்கள் மானபங்கத்திற்கு ஆளான தருணத்தில் அரசாங்கத்தை அண்டி பிரிட்டிஷாரின் அடிகளைத் தலைமேல் தாங்கி நின்றவர்களுக்கு இன்று திடீரென சுயமரியாதை வந்து விட்டதாம். பிரிட்டிஷ் பார்லிமெண்டார் என்ன அவமானம் இந்தியப் பிரஜைகளுக்கு இந்தக் கமிஷனில் செய்துள்ளார்கள் என்று என் போன்றவர்களுக்கு விளங்கவில்லை. இது ஏமாற்றம் என்று எவருக்கு விளங்காது. இவ்விதமான உண்மையற்ற தலைவர்களென்போரை நாம் பின் பற்றுவதைப் பார்க்கிலும் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரைவிட இன்னும் கொடுமை செய்பவர்களை ஆதரிப்பது மேல் என்று தோன்றுகிறது. இதுதான் என்போன்றரின் திடமான நம்பிக்கையாகும். தேசத்தைத் தாங்குவதாக ஏமற்றி வாழும் இவர்களின் யோக்கியதையைவிட பிரிட்டிஷாரின் யோக்கியதை குறைந்து விட்டதாக எமக்குத் தோன்ற வில்லை. இப்பேர்ப்பட்ட யோக்கியதையை உடையவர்களில் சிலர் சென்னையில் நடந்த அகில இந்திய ஆதிதிராவிட மகாநாட்டின் தீர்மானத்தைக் கண்டித்து வருகிறார்கள். கோக்கேல் மண்டபத்தில் 30 பேர் கூடி அரசியல் கமிஷனை வரவேற்றிருக்கின்றார்களாம். சமீபத்திய காசியில் எல்லாக் கட்சியாரின் கூட்டத்தில் எத்தனை பேர் கூடி பகிஷ்காரம் செய்தல் வேண்டும், உஷார் செய்ய வேண்டும் என்று தீர்மானித்திருக்கின்றார்கள் என்பது எமக்கு விளங்கவில்லை. சுவாமி சகஜானந்தம், ரெவ் பகதூர் ராஜா போன்ற ஆதிதிராவிடத் தலைகள் கூடித் தீர்மானம் செய்திருப்பதை இவர்கள் கண்டிக்க என்ன யோக்கியதை இருக்கின்றது என்று எனக்கு விளங்கவில்லை. பொது மக்கள் சுயாஜ்யக் கட்சியை நம்பியோ, ஜஸ்டிஸ் கட்சியை நம்பியோ ஏமாறுவதைக் காட்டிலும் தமது உண்மையான குறைகளை அவசியமேற்பட்டால் கமிஷன் முன் கூறிக்கொள்வது மேல் என எமக்குத் தோன்றுகிறது. பொது மக்களே ஏமாறுதீர்கள். பகிஷ்காரமா? பயித்தியமா? ஹார்த்தலா? ஏமாற்றமா? எச்சரிக்கை! எச்சரிக்கை!!

டி. சாரதன்.

சமாதானப்புரம் அர்ச் லூர்து மாதா சபை.

திருநெல்வேலிஜில்லா பாளையங்கோட்டை சமாதான புரத்திலிருக்கும் கத்தோலிக்கர்களின் பஞ்சாயத்து பேசின தீர்மானத்தின் படி 8—10—17 ல் அர்ச்லூர்து மாதாவின் பேரால் ஸ்ரீமான் திரு. பி. அந்தோனி யவர்களின் நன்முயற்சியால் ஸ்தாபித்து நடத்தி வருகிற சங்கத்தின் அங்கத்தவர்கள் ஒரு பொதுக் கூட்டம் 15—1—28 ல் கூடினது. கீழ் சபைக்குரியவர்களையும் தெரிவு செய்து கௌரவ காரியதரிசியும் பொக்கிஷதாரும் உபகாரியதரிசியும் வைஸ்பிரசிடெண்டும் சங்கத்தின் நிர்வாகஸ்தர்களாக நேமித்திருக்கிறோம். இந்த சங்கத்தில் சேரவிரும்பும் அங்கத்தவராகள் பிரவேச கட்டணம் ரூபாய் ஒன்றும் மாத சந்தா அணா 8 ம் கீழ் சங்கத்தின் கௌரவ காரியதரிசியிடம் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்வார்களாகவும் கீழ் சங்கப் பொதுக்கூட்டம் ஒவ்வொரு மாதமும 11 தேதி இரவு 9 30 ஒன்பதரை மணிக்கு குறித்த இடத்தில் கூட்டப்படும். பொது ஜன நன்மையைக் கருதி உபந்நியாசிக்க விரும்பும் புண்ணியவான்கள் சங்கத்தின் கௌரவ காரியதரிசியவர்களிடம் நேரிலாவது கடிதத்தின் மூலமாயாவது மூன்று நாளைக்கு முன்னதாக தெரியப்படுத்தும்படியாகக் கேட்டுக்கொள்கிறோம்,

15—1—28 கொழும்பு. } காரியதரிசி திரு. பி. அந்தோனி

பழையன கழிதலும் புதியன புகுதலும்

—o—

"நவசக்தியில்"

திருவாளர் - வல்லை - பால சுப்பிரமணியன் B. A. எழுதுவது

"சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே, ஆதியிலே அபிமானித் தலே கின்ற உலகிர் அலைக்கலைந்த வீணை நீரழிதல் அழகலவே, நீதியிலே சன்மார்க்க நிலை தனிலே நிறுத்த நிருத்த மிடுந் தனித்தலைவர் ஒருத்த ரவர்தாமே, வீதியிலே அருட் சோதி விளையாடல் புரிய மேவுகின்ற தருணமிது கூறுகின்றே னுமையே"

அணிக்காகக் குட்டையில் நாடார் மகாஜன சங்கத்தினது பதினோராவது மகாநாடு கூடிற்று. அம்மகா நாட்டிற்கு அவ்வமயம் தலைமை வகித்த பேராசிரியரான ஆர். கே. ஷண்முகம் செட்டியாரவர்களது முகவுரைப் பிரசங்கம் பல விழுமிய கருத்துக்களைத் தன்னகத்தேகொண்டுள்ளதால் அஃது எம்மனோரால் பொன்னேபோல் போற்றத்தக்கது. 'பண்டு தொட்டு நம் நாட்டில் கால் கொண்டு, நமது ஒற்றுமைக்கு இடையூறுகள் நிகழ்த்தி நம்மைப் பல்லாற்றாலுங் கெடுத்து வரும் போலிச் சாதி வேற்றுமைகளை அறவே ஒழித்தல் வேண்டும்; இன்றே ஒழித்தல் வேண்டும்' என்னுங் கருத்துப் பற்றி அப்பெரியார் பலபட விரித்துக் கூறினர். ஆம் இத்தகைய சீர்திருத்தங்கள் செய்வதில் பையப்பைய இவைகளைச் சீர்திருத்திக்கொள்ளலாம், அவசரப்பட்டால் ஆபத்தாய் முடியும், சீர்திருத்தங்களை மக்களிடை புகுத்தற்கு முன் பொதுக் கல்வி அவர்களிடம் பரவச் செய்தல் வேண்டும். அஞ்ஞான்று அவர்கள் தாமாகவே திருந்தி விடுவார்கள்" என்று சிலர் சொல்வதெல்லாம் வாய் வேதாந்தமும் சோம்பேறி ஞாயமுமேயல்லாது வேறென்னை யென்க. இப்படிச் செய்வோர் சுயநலப்பிரியர்களும், மக்களுக்குள் உளவாய எண்ணிறந்த வேற்றுமைகளினால் தாம் உயிர் வாழ்பவர்களும், மக்கள் ஒன்று பட்டால் தம் பிழைப்புக் கெடுமே என்றஞ்சும் பயங் கொள்ளிகளுமாவர்.

ஒருநில் கொடிய நச்சு நோயொன்று மிகவிரைவாய்ப் பரவி கூற்றுவனுக்கு எண்ணிறந்த உயிர்களைக் கொள்ளை கொள்ளை வாய் வரி விருந்தளிக்குஞ் சமயத்தில் உடனே செயற்பாலதியாது? அத்தைய கொள்ளை நோயை மேலும் மேலும் பரவா வண்ணம் அக்கணமே எடுத் தகற்றியல்லவோ மறுவேலை பார்த்தல் வேண்டும்? தீவிரமான மருந்துகளை நோய்ப்பட்டார்க்கு அருந்தக் கொடுத்தல் வேண்டும், பிணியாளர் படுத்திருக்கையும், கையாடினவுமான படுக்கையையும் உடைகளையும் கொருப்பினுக் கிரையாக்குதல்வேண்டும். குளங்களிலும், கிணறுகளிலும் அக்கச்சநோய்ப் புழுக்கள் பல்கிப் பெருகா வண்ணம் அவற்றை உடனே கொல்லும் மருந்துகளை இரைத்தல் வேண்டும். இவற்றினையெல்லாஞ் செய்யாது ஒரு சிலர் ஒரு பக்கலில் சுகமாக அமர்ந்து "ஆகா என் இவ்வளவு அவசரம்; நோய் தான் வந்தால் என்ன முழுகிப்போயிற்று; நீங்கள் செய்யும் ஆடம்பாத்தில் இல்லாத நோயினையும் இருப்பதாகச் சொல்லி மக்களுக்கு இன்னும் நோயினை அதிகப் படுத்துகிறீர்கள். முதலில் நோய் மூலத்தைக்கண்டு பிடியுங்கள். அதற்கு சுகாதாரக் குறைவுகளே காரணம்; அச்சுகாதாரக் குறைவுகளுக்கு மக்களிடைப் பரவியிருக்கும் அறியாமை காரணம். ஆதலால் முதலில் செய்ய வேண்டுவதியாதெனின், ஆங்காங்குப் பள்ளிக்கூடங்கள் வைத்து மக்களுக்குப் பொது அறிவைப் புகட்டி, அதன்மேல் சுகாதார முறைகளைப் போதித்து வந்தால் நோய் தானே போய்விடும்" என்று சொன்னால். ஆகா! இவர்களை எத்துணைக் கூர்த்த மதியினரென்று யாம் கருதுவோம். ஆம் இவர்கள் கூறுவது முற்றும் உண்மை "நோய் தானே போய்விடும்." நோய்ப்பட்டார் இருப்பினன்றே நோயிருக்கும்? பாலை வனத்தில் நோய் ஏது? சுகாதாரக் கல்வி முதிர்ந்து மக்களைப் பக்குவப்படுத்துவதற்குள் நோயும் தன்கு முதிர்ந்து, முக்தியுலகிற்கு அவர்களைப் பக்குவப்படுத்தி விட்டது.

எம் அரிய அன்பர்களே! நம் இந்திய நாடு நம் கண்களுக்கு இஞ்ஞான்று என்ன காட்சி வழங்குகின்றது? கரிகாற் பெருவளத்தானது பண்டைத் தமிழாசியா யாங் காண்கின்றோம்? தொல்காப்பியம், திருக்குறள், கலித்தொகை, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு, பத்துப்பாட்டு, இறையனாரகப் பொருள் என்னும் முழு முழு மானிக்கங்கள் என்றுங் குன்று ஒளி வீசின காலமா இது? புத்த ஞாயிறு தோன்றி அஞ்ஞான ஒளியைப் பரப்பிப் பிறகு அது பட்டவுடன் இருட்குழாங்கள் மீண்டும் நிரம்பிப் படலம் படலமாக நம்மிந்திய நாட்டைக் கவிந்துகொண்டன. அச்சோ மௌரியருடைய செங்கோன்மை போயிற்று. அக்பர் பெருமானுடைய சமரசியுடைய அரசு மறைந்தது போலிச்சாதிக்கட்டுப்பாடுகள் மலிந்தன பெண்ணாசி அடிமையானுள் அவளுக்கு உரிமையும் கல்வியும் வழங்கப்படவில்லை மக்களை ஒன்று படுத்தி அவர்களுக்குச் சுய அரசு வழங்கும் ஆற்றல் பெற்றிருந்த புத்த சமயம் நாயகத்தை விட்டு, சில போலிச் சமய வாதிகளாலும் மத வெறி பிடித்த அரசர்களாலும் வேறு நாடுகளுக்கு வெறுத்துரத்தப்பட்டதுபுத்த சமயத்திற்கு அவ்வாற்றல் உளதென்பது அஃதெஞ்ஞான்று பரவியிருக்கும் நாடுகளாகிய சீனம, ஜப்பான், பர்மா இலங்கை முதலிய நாடுகள் எய்தியிருக்கும் ஒற்றுமை நிலையை உற்று நோக்குவார்க்குத் தெள்ளிதிற் புலனும். பொய்கதைகள் நிரம்பின, பொருளற்ற குருட்டு வழக்கங்கள மலிந்தன. சமயத்தினை போராலும், கடவுளர் போராலும் மூகாதையர் போராலும் ஒரு சிலர் பலரை வஞ்சித்து பொருள் பறித்துதின்கின்றனர். இவையிற்றினை யெல்லாங் காணும் எம் கண்களும் புண்களாயின. எம்மனமுலைந்து "அந்தோ; எம் அருமை இந்திய அன்னைக்கு உய்வுண்டோ" என்று வாய் விட்டரற்றினால், பொல்லாதகிரொலி "உய்வுண்டோ" என்று தானுங்கூறி எம்மை எள்ளி நகையாடுகின்றது. யாம் நாணத்தினால் தலை குனிந்தோம்.

நமது நாட்டில், பண்டு தொட்டே, எத்தகைய சீர்திருத்தத்திற்கும், தடைக்கல்லாக ஒரு சிலர் தோன்றியிருக்கின்றனர் நாட்டின் உண்மை நிலை கண்டிரங்கி ஒரு சில தொண்டர்கள் சீர்திருத்த வினையுன்னி வெளியே வருவார்களானால், மேற்கூறிய கூட்டத்தார் "அச்சோ மதம் அபாயத்திலிருக்கின்றது. கோயில்களில் இடி விழுந்தது கடவுள் நம்பிக்கை கெட்டது கொடிய நாஸ்திகம் பரவுகின்றது; நம்மூன்னோர்கள் வகுத்த வழி தூர்த்து விட்டது" என்று கூக்குரலிட்டு அலமருகின்றனர். இவர்களது அழுகை, உண்மையான அழுகையா நீலிக்கனமா என்பதை இவர்களோடு சிறிது பழகியவர்களும் அறிந்து கொள்ளுவார்கள் என்ன தான் முழுகிப்போயிற்றென்று நாம் கேட்கின்றோம்.

மிக நாகரிகம் உற்றிருக்கின்ற இவ்விருபதாம் நூற்றாண்டிலுங்கூட ஒருசிலர் "வருணாசிரம தர்மம் போற்றற்குரியது; கைம்பெண் மறுமணம்விலக்கத்தக்கது; இளமை மணம் மிகவும் நன்மை பயக்க வல்லது கீழ் சாதியாரென்போர் ஆலயங்களிலும், மற்றும் உயர்ந்த சாதியார் என்போர் நடமாடுமிடங்களிலும் காலெடுத்து வைக்கக்கூடாது என்றிவ்வாறெல்லாம் வாய்க்குவந்தவாறெல்லாம் பிதற்றுவார்களானால் இவர்களது அழுக்கடைந்தமனத்தவம்எவ்விதப்பாழுங்குழியில்புதைந்து இருக்கிறதென்பதை இதனைப் படிப்போர்களே தெரிந்து கொள்ளலாம். எனினும்; இவர்களெல்லாம் நன்கு படித்தவர்களாம்; மேதக்க டாக்டர்களாம்; வேதவித்துக்களாம் கன்பாடிகளாம் வித்வான்களாம் சிரோமணிகளாம் பண்டிதர்களாம் மஹாமஹோபாத்தியாயர்களாம் பிறகு என்னென்னவோவாம் இவர்களைபபற்றி நினைக்குங்கால்.

"ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும்
[தாமடங்காப்
பேதையிற் பேதையாறில்".

"பயனில் சொல் பாராட்டு வானின மகன்
மக்கட் பதடியெனல்" (எனல்

"உலகத்தாருண் டென்பதில்லெண்பான்
அலகையா வைக்கப்படும்" (வையத்து

என்னும் அருமைக் குறட்பாக்கள எம் கண்முன் தோன்றுகின்றன.

பின் இவர் தம் அற்பமதி இருந்தவாறென்னே! இந்நிலவுருண்டையின் படைப்புக காலந்தொட்டு இதுகாறும், எத்தனையோ நாடுகள், எத்தனையோ சமூகங்கள், எத்தனையோ இயக்கங்கள், எத்தனையோ போர்கள் இயற்கை யன்னையின் ஆணைப்படி அவ்வக் காலங்களுக் கேற்பத் தோன்றி, நிலைத்து அழிந்தன. அங்ஙனே நமது தென்னாடெங்ஙனும் பூத்துள்ள இயற்கை இயக்கமும் தன் மதிபபுப் பிரசாரமும் (சுயமரியாதை பிரசாரம)ஒரு காரணத்தை முன்னிட்டுத் தோன்றின;மக்கள் தம்மை இன்றி

(இதன் தொடர்ச்சி 15-ம்பக்கம் பார்க்க.)

திதிகொடுத்தல்.

இந்துமதஸ்தர்களென்னும்நாம் திதி கொடுத்தல் என்னும் ஒரு பிதுர்கர்மம் செய்து வருகிறோம். அதாவது, இறந்துபோன வடி ச பெரியார்கள் மோட்சத்தைப் பெறும்படி செய்வதற்கென்று பிதுர்கள் இறந்துபோன திதி அல்லது நக்ஷத்திரத்தன்று அன்ன சிரார்த்தம், ஏழை சிரார்த்தம் செய்தும் அவரவர்கள் சக்திக்கேற்ப தானதருமங்களும் செய்து வருகிறோம். இந்தக் கிரிகை வருஷம் ஒருதரமாகிலும் அவர்களைப்பற்றி நினைப்பதற்காவது ஒரு சந்தர்ப்பம் கொடுக்கிறது.

முதல் ஏமாற்றம்

ஆனால் நாம் செய்துவரும் முறைப்படியும் ஒழுக்கமின்மையும் மூடநம்பிக்கையுமாக இருக்கிறதால் இதை மதஸ்தர்கள் கேலிசெய்யக்கூடியதாய் இருக்கிறது. முதலாவது நமது பிதுர்க்கள் செத்துப்போனதால் நமக்குத் தெரியாது அதைக் குறித்துவைக்க அக்கரையுமில்லை. இதை ஒரு புரோகிதர் மூலமாய் ஒவ்வொரு வருடமும் தெரிந்து கொள்ளுகிறோம். அந்தப் புரோகிதரோ நம்மைப்போல் ஆயிரம் பேருக்கு மேல் சொல்லவேண்டியவராயிருக்கிறார். ஒரே தினத்தில் பத்துப்பேருக்கு திதிசெய்து வைக்க வேண்டியவராயுமிருக்கிறார். அப்படியிருக்க நம்ம பிதுர் தினத்தை அவர் சவுகரியப்படியும் வரும்படியின் தாரதம்மியப்படியும் காலையோ, நக்ஷத்திரங்களையோ மாற்றலாம். நாம் அதினத்தை விட்டுவிட்டு வேறு ஒரு தினத்தில் திதி கொடுக்கிறோம். இது முதல் ஏமாற்றம்.

இரண்டாவது ஏமாற்றம்.

அப்படி வரும் புரோகிதர் தன்னைப் பிதுராக பாவித்து தனக்கே சோடசோபசாரம் செய்யும்படி செய்வித்து ஒவ்வொரு பதார்த்தத்தையும் வைக்கும்படி சமஸ்கிருதத்தில் சொல்லும்போது "இது ஏதோ மகா மந்திரம் கடவுளிடமிருந்து பிறந்தது இந்த சக்தியினால்தான் இப்பதார்த்தங்களெல்லாம் பிதுர்களுக்குப் போய் சேருகிறது" எனறு நாம் எண்ணி வீட்டிலிருக்கிற பதார்த்தங்களை ஒன்றுவிடாமல் வைத்து அதற்கு தவறாமல் (சொன்ன புஷ்பம்) பணத்தையும் வைத்து புரோகிதர் போதாதென்று கோபிக்கும்போது "சுவாமி ஏதோ இவ்வருஷம் இருக்கட்டும். அடுத்த மாதம் எங்கள் தாயார் திதிக்கு எல்லாம் சேர்த்துக் கொடுத்து விடுகிறேன்" என்று கெஞ்சிக் கேட்டதின் பேரில் புரோகிதர் முணு முணுத்துக்கொண்டு மூட்டை கட்டுவது இரண்டாவது ஏமாற்றம்.

மூன்றாவது ஏமாற்றம்.

பிராமணனைப் பிரதக்ஷணம் செய்வது பிதுர்க்களைப் பிரதக்ஷணம் செய்வதாகப் பாவித்து தான்மட்டும் இந்த மூடத்தனத்திலீடுபட்டது போதாமல் உத்தமிகளாகிய தனது பதினிமார்களையும் புரோகிதனைச் சுற்றும்படிச் செய்து, அவர் கொடுக்கிற அழுக்குத் தண்ணீரை காலிரண்டும் கையிரண்டும் சேர்த்து வாங்கி குடிததுவிட்டுமே லுக்கும் தெளித்துக் கொண்டு "சுவாமி சுவாமி வீடெல்லாம் தெளியுங்கள்" என்று சொல்லி தம்பதை முழுதகால் புழுதியோடு அழுக்கு வேட்டியோடு தெப்புத கண்ணீரை மாவிலையில் வீடி, வாசல், சமையல்வீடி, சுவாமி வீடி, படுக்கை வீடி, கக்கூஸ் வீடி இவைகளுக்கெல்லாம் தெளிக்கும்படி கேட்டு உகொள்ளுகிறோம். இதினால் சகல தீட்டுகளும் போய்விடுவதாக திருப்தியாய் விடுகிறது. புரோகிதரோ நமக்குக் கடவுளாகவும், பிதுராகவும், தந்தையாகவு மிருந்து கறக்க வேண்டியதெல்லாம் கறந்து, அடையவேண்டிய மரியாதையெல்லாம் அடைந்ததுடன் தானில்லாமல் ஒன்றுசெய்ய முடியாதென்று காட்டிவிட்டுப் போகிறார். இதில் இவருக்குப் பெருமை. நமக்கோ அழுக்குத் தலையை குடித்தது, அள்ளி அள்ளிக் கொடுத்தது, அய்யர் காலைப் பிடித்தது, அப்பனென்று நடித்தது, அம்மா சுற்பைக் கெகெடுத்தது இவ்வளவுதான் மிச்சம்.

நான்காவது ஏமாற்றம்.

படித்தவர்களானாலும் பாமரர்களானாலும் எந்த விஷயத்தையும் ஆராய்ந்து எது நடக்கூடியது எது நடக்கக்கூடாதது என்று யோசிக்கவேண்டும். இந்த மதத்திலுள்ளவர்களுக்கு மட்டும் பிதர்லோகம் இருந்து நாம் அனுப்புறபதார்த்தங்கள் புரோகிதர் மூலமாய் அங்கு போய் நமது பிதுர்க்களுக்குச் சேர்ந்து மோட்சமடைவதாயிருக்குமானால் திதி வகையாக கொடுக்காக இந்த மதஸ்தர்களுடைய பிதுர்க்கள் கதி என்ன? இத்தகளுக்குள்ளேயே பெரும்பாலோர் இக்கர்மம் செய்யாது இருக்கிறார்களே அவர்கள் கதி யென்ன? அவர்களும் மற்றவர்களைப்போல் உண்டு உடுத்து இருந்தவர்கள் தானே? இவர்களெல்லோருக்கும் உய்யும் வழியில்லையா? மேலும நாம் கொடுக்கிற தானங்களில் உணவு பதார்த்தங்களாக கொடுப்பதாகிலும் ஏதோ புரோகிதன் வீட்டுக் குடும்பக்களுக்கு அல்லது அவரது தாசிக்கு இரண்டு நாளைக்குப் பசி ஆற்றுகிறது மாட்டு வாலைப்பிடித்துக்கொண்டு பிதுர்க்கள் மோட்ச உலகம் போகிறார்களென்று நினைத்து பசு தானம் செய்வது பொருத்த முடையதா? அப்படிக் கொடுப்பதாகவே வைத்துக்கொண்டாலும சகல பதார்த்தங்களுக்கும் ஒரு தர்ப்பையை கீட்டி அந்தக்காயாத புல் மூலமாய் ஒப்புக்கொண்டிருக்க பசு விஷயத்தில் மட்டும் என் தீர்ப்பை செல்லாது, செல்லாவிட்டாலும் கிழட்டு மாடு ஏன கூடாது? கண்றோடு கறவை மாடு எதற்கு? அதுவும் வேளைக்கு 3 படி பால் கறக்ககூடிய சுமார் 75 ரூபாய் பெறுமானது எதற்கு? இதெல்லாம சரிவர இல்லாவிட்டால் சண்டையும் அதிருப்தியும் தானே. நாம்கொடுக்கிறதை அப்படியே அய்யர் பிதுர்களுக்குக்கொடுக்கிறதுதானே இவருக்கு தரகுக்கு பணமும் கொடுத்து விடுகிறோம். மாடு பால் குறைந்தாலோ அல்லது கிழட்டு மாடாயிருந்தாலோ சண்டை பிடுபவர்கள் நமது பிதுர்க்கள் தானே; அப்படியவர்கள் கேட்டால் நாம் ஏதோ சமாதானம் சொல்லிவிட்டால் போகுது; அய்யர் என் சம்மதிக்க மாட்டேனென்கிறார்? இதிலிருந்தாவது ஆண்டவன் நமக்கு பகுத்தறிவு கர வேண்டாமா?

எல்லாம் ஏமாற்றமே.

ஆகையால் சுருங்கச் சொல்லுமிடத்து தந்திசாலிகளாகிய பிராமணர்கள் படித்திருந்தபடியாலும் பெருங்கூட்டமாகிய திராவிடர்கள் தங்களை மதிக்கவேண்டும் என்கிற எண்ணத்தாலும் வெளிநாட்டிலிருந்து இங்குவந்தவர்களானபடியாலும் விவசாயம், வியாபாரம் முதலிய தொழில்கள் செய்வதற்கு முடியாமலும் போதிய ஜனத்தொகை பூமி காணி இல்லாமலிருந்தபடியாலும் தங்கள் ஜீவனோபாயத்துக்கு கஷ்டப்பட்டு சம்பாதிப்பது சாத்திய மில்லாமலுமிருந்தபடியாலும் மிகவும் புத்திசாலித் தனமாக சில நூல்களை உண்டாக்க முயற்சித்தார்கள். இப்போது நாங்களெல்லாம் படித்து விஷயம் தெரிந்துக் கொண்டோமென்றருக்கிற இக்காலத்திலேயே புராட்டுக் கதைகளை கப்பி மூட பக்தியிலீடுபட்டிருக்கிறோம். அதை யாராவது தப்பு என்று சொன்னால் அந்தப் புராணத்தில் இப்படிச் சொல்லுது, இந்தப் புராணத்தில் இப்படிச் சொல்லுது என்று நாமே வக்காலத்து வாங்கிக்கொள்கிறோம். எனென்றால் ஒருவர் வாயில் சொல்லுவதை விட புத்தகத்தில் எழுதிவிட்டு இந்த ரிஷி சொன்னார் அந்த ரிஷி சொன்னார் என்றிருந்தால் முற்றிலும் கப்பியே ஒப்புக் கொண்டு வருகிறோம் மற்றதை ஏன் சொல்ல வேண்டும்.

இப்போது பிரம்மஞான சங்கம் என்றுஒன்றிருக்கிறது அதில்சேர்ந்திருப்பவர்களெல்லாம் நல்ல படிப்பாளிகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் உலகம் பூராவும் விசாரணை செய்தவர்கள் என்று சொட்லிக் கொள்பவர்கள் பல நூல்களைப் பார்த்து மிருப்பவர்கள் இன்றைக்கு பெரிய மகாத்மாக்களெல்லாம் டாகடர் பெஸண்டம்மையார் மிஸ்டர் லெட்பீடர் துரை இவர்களோடு நினம் பேசுகிறார்களென்றும் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியென்ற ஒரு பிராமணச்சிறுவருடைய நிரோகத்தை எடுத்துக் கொண்டு ஒரு லோக குரு வரப் போகிறானென்றும் அதற்காக இந்த சரீரத்தை வெகு பக்குவமாக வளர்ப்பதாயும் ஆகையினாலே அடிக்கடி அவருக்கு உடம்பு சீர் கெட்டுப் போய் விடுகிறதென்றும் இருந்தபோதிலும் அதுலாயக்குடையதாகவென்றும் சீக்கிரம் ஜகத்குருபீடவேசம் ஆகப் போகிறார் என்றும் இந்த இருபதாவது நூற்றாண்டிலும் மெய்யென்று நம்பும் போது ஒன்றும் அறியாமல் எழுத்து வாசனையே யில்லாத பாமரர்களிடம் பிராமணன் பிரம்மாவின் முகத்தில் பிறந்தவன் மற்றவன் அவனுக்கடிமை பிராமணனுக்குகொடுத்தால் தான்தருமம் மற்றவனுக்குகொடுப்பது பாவம் பிராமணன் தான் எல்லோரையும் மோக்ஷத்துக்கு அனுப்புகிறவன் அவன்தான் வேதம் படிக்க வேண்டும சமஸ்கிருதம படிக்க வேண்டும் மற்றவன் படித்தால் நரகம் அடையவேண்டும் பரிகாரமாக ஈயத்தைகாய்ச்சி காதில் ஊத்த வேண்டும். அல்லாவிட்டால் பிராமணனுக்கு தானமாக

இதன் தொடர்ச்சி 14 பக்கம் பார்க்க

ஹர்ட்டால்.

கமிஷன் பகிஷ்கார வேலை நிறுத்தம் வேற்றிலை பாக்குக்கடைக்காரருக்கும் ரிக்ஷா வண்டிக்காரருக்கும் சம்பாஷனை.

I

நிக்ஷா வண்டிக்காரர்— என்ன ஐயா! வெற்றிலைபாக்குக் கடைக்காரரோ! இந்தப் பார்ப்பன வக்கீல்களும் பள்ளிக்கூடத்துப் பையன்களும் கூட்டம் கூட்டமாக வந்து ஒவ்வொரு கடைக்குப் பக்கத்திலும் நின்று நின்று பேசுகின்றார்களே அது என்ன விஷயம்.

வெற்றிலைபாக்கு கடைக்காரர்,— அது உனக்குத் தெரியமா? அது என்னவென்றால் எல்லோரும் கடை மூடவேண்டுமாம்.

நிக்ஷா,— எதற்காக கடைமூடவேண்டும்?

வெற்றிலை— வெள்ளைக்காரர்கள் நமக்குச் சுயராஜ்யம் கொடுக்கமாட்டோம் என்கிறார்களல்லவா? அதற்காக கடைமூடி அவனை மிரட்டினால் தானாக கொடுத்துவிட்டு போவான். அதற்காகத்தான் கடையை மூடுவது.

நிக்ஷா—வெற்றிலை பாக்கு கடைக்காரர் கடையை ஒரு நாளைக்கு மூடிவிட்டால் வெள்ளைக்காரன் பயந்து சுயராஜ்யத்தை தூக்கி கொடுத்துவிட்டு ஓடிப் போய் விடுவானு? அப்படியானால் நாம் ஒவ்வொரு தேசத்திலும் போய் வெற்றிலை பாக்கு கடையை வைத்து மறுநாள் மூடிவிட்டால் அந்த தேசத்துக்காரன் நமக்கு சுயராஜ்யம் கொடுத்து விட்டு ஓடிப்போவானே? நாம் ஏன் அப்படி செய்யக்கூடாது?

வெற்றிலை—நிக்ஷா வண்டிக்காரன் என்பது சரியாயிருக்கின்றது. நான் சொல்வதைச் சரியாய் தெரிந்து கொள்ளாமல் பரிகாசமாய் பேசுகின்றாயே.

நிக்ஷா—இல்லை அய்யா வெற்றிலை பாக்கு கடைக்காரர்களே மகா புத்திசாலிகளாக இருக்கட்டும். எங்களுக்கு அதில் பங்கு வேண்டாம். எதற்கு கடை மூடுவது எனக்கு தெரியும்படியாய் சொல்லுங்களய்யா?

வெற்றிலை—நேற்று கடற்கரையில் மீட்டிங்கு நடந்ததே அங்கு வந்திருந்தால் உனக்கு எல்லாம் நன்றாய் தெரிந்து இருக்கும். ஸ்ரீமான்கள் சினிவாசய்யங்கார் சத்தியமூர்த்தி அய்யர் எல்லோரும் பேசினார்கள்.

நிக்ஷா—எனக்கு கடற்கரைக்குவர நேரமெங்கே? சினிவாசய்யங்காரும் சத்தியமூர்த்தி அய்யரும் பகலெல்லாம் கோர்ட்டுக்குப் போய் வக்கீல் பேசி மாதம் 10000, 5000 சம்பாதித்துக்கொண்டு சாயங்காலம் பீச்சுக்காத்துவாங்க வருகிறபோது மீட்டிங் பேசுவார்கள். எனக்கு அப்படி முடியுமா? சாயங்கால வேளையில்தான் ஜனங்கள் அப்புறம் இப்புறம் போவார்கள். ரிக்ஷா வண்டிக்கு அப்பொழுதுதான் ஜாக்கி கிடைக்கும். அதை விட்டுவிட்டு மீட்டிங்குகேட்கப் போய் விட்டால் ராத்திரிக்கு கஞ்சிக்கு என்ன செய்வது?

வெற்றிலை—ஸ்ரீமான் சினிவாசய்யங்காருக்குதான் சம்பாதனை வருது. ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யருக்கும் அவர்கள்கூட வரும் மற்ற ஆளுகளுக்கும் பணம் வரும்படி எது? உனக்கு வரும் வரும்படிகூட அவர்களுக்கு இல்லை. அவர்களெல்லாம் வந்து பேசவில்லையா? நீதானு கஷ்டப்படுகிறாய்?

நிக்ஷா—உங்களுக்கு எண்ணய்யா தெரியும்? ஸ்ரீ சினிவாசய்யங்கார் தம் கூட வரும் ஒவ்வொரு ஆளுக்கும் மாதம் 250 முதல் 10, 15 வரையில் எல்லோருக்கும் பணம் கொடுக்கிறார். எனக்கும் அந்த மாதிரி வாங்கிக்கொடுத்தால் நானும் நாய்க்குட்டிபோல் அவர்கூடவே திரிவேன் தெரியுமா? அது கிடக்கட்டும் அவர்கள் என்ன சொன்னார்கள்?

வெற்றிலை—கடை மூடவேண்டிய அவசியத்தைப்பற்றி ஸ்ரீ சினிவாசய்யங்காரும் ஸ்ரீ சத்தியமூர்த்தி அய்யரும் நேற்று கடற்கரையில் என்ன சொன்னார்களென்றால், இங்யாவுக்கு சுயராஜ்யம் கொடுப்பதற்காக பார்த்துவிட்டு போவதற்கு சீமையில் இருந்து ஒரு கூட்டம் வருகின்றதாம். அக்கூட்டம் எல்லாம் வெள்ளை முஞ்சிகளாம். நம்ப கருப்பு மனிதர் அதில் ஒருவர்கூட இல்லையாம் அதனால் நமக்கு சரியான சுயராஜ்யம் வராதாம். அதுவும் தவிர அப்படி நம்ம கருப்பு மனிதர்களில் ஒருவரை அக்கூட்டத்தில் போடாதது நம்முடைய சுயமரியாதைக்கு விரோதமாம். அதுவும் தவிர நமக்கு எப்படிப்பட்ட சுயராஜ்யம் கொடுப்பது என்று தீர்மானிக்க வெள்ளைக்காரருக்கு அதிகாரமில்லையாம். ஆனதினால் இதுகளை வெள்ளைக்காரனுக்கு தெரிவிக்க நம்முடைய கடைகளை மூடி ரிக்ஷா வண்டிக்காரர்களாகிய நீங்களும் வண்டி இழுக்கக் கூடாதாம். ஜட்கா வண்டிக்காரர்களும் வண்டி கட்டக் கூடாதாம் இவ்வளவுதான் அவர்கள் சொன்னார்கள்.

நிக்ஷா—நம்மைப் பார்க்க சீமையிலிருந்து வெள்ளைக்காரர்கள் வந்தால் நாம் வாருங்களையா என்று வரவேற்று, எங்கள் யோக்கியதையை நன்றாய் பார்த்துவிட்டு போங்கள். நாங்கள் சுயராஜ்யத்திற்கு அருகாகளாகிவிட்டோம். நீங்கள் கொடுத்ததையெல்லாம் நாங்கள் ஒழுங்காய் நடத்திக்காட்டிவிட்டோம். எங்களுக்குள் ஒருவருக்கொருவர் சண்டையாவது ஓர் சாதி கம்மி என்கின்ற வித்தியாசமாவது ஒன்றும் இல்லை என்று சொல்ல வேண்டியது சுயராஜ்யம் அடைவதற்கு யோக்கியமான மனிதர்களின் கடமையாகும்.

தவிர அக்கூட்டத்தில் கருப்பு மூஞ்சி ஒன்று கூட இல்லை என்பது ஒரு தப்பு என்று அய்யங்கார் சொல்வாரானால் கருப்புமூஞ்சி வேண்டுமென்று சொல்லுவதுதான்தப்பு என்று நான் சொல்லுவேன். கருப்பு மூஞ்சி ஆசாமிஒருவரை போடுவதாகவே வெள்ளை சம்மதிக்கிறதாகவே வைத்துக் கொள்ளுவோம் கருப்பு மூஞ்சியில் யாரைப் போடுகின்றது. என்று சொல்லுங்கள் பார்க்கலாம்.

எங்கள் சகஜானந்த சாமியையாவது எம் சிராஜாவையாவது ஆர் வீரையனையாவது போடுவார்களா? ஒரு காலும் போடமாட்டார்கள். வேறு யாரைப்போட்டால் நீங்களும் நானும் சம்மதிப்போம்? ஊரில் உள்ள உத்தியோகமெல்லாம் பாப்பாரு வயித்தில் அடித்து வைத்தும் இன்னும் பத்தாமல்உத்தியோகம் உத்தியோகம் என்று பிசாசு போல் அலைகின்றார்கள், பாப்பாரில்ஒருவரைப் போட்டால் பாப்பாருக்கு உத்தியோகமாச்சுது. சாயப்பில் ஒருவரைப் போட்டால் சாயபுக்கு உத்தியோகமாச்சுது. நம்மவரில் ஒருத்தரைப் போட்டால் நம்ம சங்கதி எடுத்துப் பேசுவார்கள். ஆதலால் வெள்ளை மூஞ்சித் தலையிலேயே வல்லா பழியாவத்தையும் போட்டு விட்டால் நாளைக்கு அவன் சொல்லுவதை தட்டிச் சொல்லலாம்.

அப்படி இல்லாமல் நம்ம ஆள் ஒன்றுஎன்று எந்த பார்ப்பானை போட்டாலும் அவனும் வெள்ளை மூஞ்சியுடன் சோந்து கையெழுத்துப் போட்டு விடுவான். அல்லது கருப்பு மூஞ்சி சொல்லுவதை குப்ப தொட்டியில் போட்டு விட்டு, எல்லா மூஞ்சியும் இருந்துதான் வேலை செய்தார்கள், மஜாரட்டி அபிப்பிராயப்படிதான் நாங்கள் சுயாராஜியம் கொடுத்தோம் என்று சொல்லி விட்டால் அதற்கு நாம் என்ன பதில் சொல்ல முடியும்? ஒன்று கருப்பு மூஞ்சி மெஜாரிட்டியாய் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் எல்லாம் வெள்ளை மூஞ்சியாயிருக்கவேண்டும். பேருக்கு மாத்திரம் ஒன்று இரண்டு கருப்பு மூஞ்சி அதில் இருந்தால் நமக்கு பெரிய ஆபத்து அதுவல்லாமல் அது பாப்பார மூஞ்சியாய் இருந்து விட்டால் வெள்ளை மூஞ்சியினிடம் பணம் வாங்கிக் கொண்டு அவர்களொடு சேர்ந்து கையெழுத்து போட்டு விட்டு வந்துவிடும். அப்புறம் நம் பாடு திண்டாட்டம் தான்.

இந்த மாதிரி நம்ம பாப்பார மூஞ்சிகள் எத்தனை தடவை நம்மை மோசம் பண்ணியிருக்கிறது உங்களுக்கு தெரியுமா? ரௌலட் ஆக்டுக்கு ஒரு பாப்பார மூஞ்சிதான் கையெழுத்து போட்டது.

துப்பாக்கி லைசென்சுக்கு கால் ரூபாயாக இருந்ததை அஞ்சு, பத்து ரூபாய் ஆக்கினதுக்கு ஒரு பாப்பார மூஞ்சிதான் கையழுத்து போட்டது.

கருப்பு மனிதர்களுக்கு மாதம் 3 ரூபாய் இருந்தால் போதும் என்று சொல்லி ஒரு பாப்பார மூஞ்சிதான் கையெழுத்து போட்டது. இப்பக்கூட தேவடியாள்கள் கோவிலுக்கு வேண்டாம் என்றால், இந்த பாப்பார மூஞ்சிகள் தான் வேணும் வேணும் என்கின்றதுகள்.

இன்னமும் இந்த பாப்பார மூஞ்சி, அக்கிரமங்கள் உங்களுக்கு தெரியாதா என்ன? தவிர கறுப்பு மூஞ்சி அக்கூட்டத்தில் இல்லாதது நமது சுயமரியாதைக்கு கேடு என்பது வெறும் புரட்டு. சுயமரியாதைக்கும் நமக்கும் வெகு தூரம்.

பஞ்சாப்பிலே ஒரு வெள்ளைமூஞ்சி காக்காய் குருவியை சுடுவதுபோல் சடபுடவென்று நம்மை சுட்டானே. அதில் சுயமரியாதைக்கேடு இல்லையா? நம்ம பெண்டுகளை மானபங்கப்படுத்தினானே? அதில் சுயமரியாதைக்கேடு இல்லையா? அந்த சமயத்தில் சுயமரியாதைக்கு மகாத்மா ஆரம்பித்த இயக்கத்தில் இருந்து ஓடிப்போன ஆளுகள்தானே. இதனால் சுயமரியாதைக்கேடு என்கின்றவர்கள் அந்த மகாத்மா காந்தி இயக்

கத்தை பாழாக்கின ஆரஞ்சள் தானே இப் போது ஓட்டோ வந்து கொண்டிருக்கிறார்கள். தவிர நமக்கு சுயராஜ்யம் கொடுப்பது வெள்ளைக்காரன் அல்ல வென்று நாய அவனே தள்ளிவிடுவதானால். அவன் சட்டசபைக்கு என் போகவேண்டும்? அவனிடத்தில் நமது கொடுமைகளை என் சொல்லிக்கொள்ள வேண்டும்? அவனிடம் நமக்கு வேண்டிய சுயராஜ்ய திட்டத்தை என் எழுதிக்கொடுக்க வேண்டும்.

அவரை இன்னமும் நமது ராஜா என்று என் ஒப்புக் கொள்ள வேண்டும்? அந்த ராஜாவிடத்தில் விசுவாசமும் பக்தியும் இருப்பதாக நாம் சட்டசபையில் என் பிரமாணம் செய்யவேண்டும். அந்த பிரமாணத்தை நாம் வாபீச வாங்கிக்கொண்டோமா? அந்த சட்டங்களுக்கு கீழ்ப்படிவதில்லை என்று சொல்லிவிட்டோமா? ஒன்றுமில்லாமல் வெத்திலை பாக்கு கடைக்காரனையும் ஜட்காவண்டி ரிக்ஷா வண்டிக்காரனையும் ஏமாற்றி வாழுவை இந்த பகிஷ்காரப் பூட்டு?

வெத்திலை:—நீ கண்ணை மூடிக்கொண்டு என்ன என்னமோ பேசுகிறாய் பெரியோர்கள் சொல்வதை நாம் கேழ்க்க வேண்டிய தே ஒழிய இதெல்லாம் நாம் பேசலாமா? அவர்கள் நமக்காக எவ்வளவோ பாடுபடுகிறார்கள். அவர்களுக்குத் தெரியாததா நமக்கு தெரிந்து விட்டது?

ரிக்ஷா:—என்ன இவர்கள் மகாப் பெரியோர்களாய் போய் விட்டார்களாக்கள், இந்த ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் எப்படி நமக்கு பெரியார் ஆவர்? அவர் சம்பாதிக்கும் பணம் அவர் பெண்டு பிள்ளைகள் அனுபவிக்குமே ஒழிய உங்களுக்கும் நமக்கும் லாபம் என்ன? யாராவது அவர்கள் காலை நக்கிக்கொண்டு திரிந்தால் அவர்களுக்கு எதாவது கொடுத்து அதிலும் அவர்கள் மூலமாய் ஒன்றுக்கு இரண்டாக சம்பாதித்து விடுவார்?

இந்த அய்யங்கார் இதுவரை எத்தனை காணம் போட்டிருக்கிறார்? அவர் சிஷ்யர் ஸ்ரீ சத்தியமூர்த்தி அய்யரின் யோக்கியதை என்ன? மற்றொரு சிஷ்யர் ஸ்ரீ ஓ. கந்தசாமி செட்டியாரின் யோக்கியதை என்ன? இன்னும் மற்ற கூட்டத்தின் ஆளுகளின் யோக்கியதை என்ன? இதில் கூலி வாங்காமல் ஒரு ஆளாவது அய்யங்கார் கூட வந்திருக்கின்றதா? இன்றைய கூலிகூட ஒன்றுக்கு மூன்றுப் வாங்கிவிடுவாகள். தவிர இதில் யாராவது தங்கள் உத்தியோக வேலையை விட்டாகளா? வரும்படியை விட்டார்களா? சுயமரியாதைக்காக பதினாயிரக் கணக்கான ரூபர் ஜெயிலுக்கு போனார்களே அதில் ஒரு ஆளாவது இதில் இருக்கின்றதா? இந்தப் புரட்டுகளை நீங்கள் அறியாமல இவர்களை பெரியார்கள் என்கின்றீர்களே? இவர்கள் இங்கு வருவதை விட்டு வக்கில்கள் வீட்டுக்குப்போய் அவர்கள் கோர்ட்டுக்கு போக வேண்டாம் என்று சொல்லட்டுமே. உத்தியோகஸ்தர்கள் வீட்டுக்குபோய் அவர்களை ஆபீசுக்கு போகவேண்டாம் என்று சொல்லட்டுமே. பள்ளிக்கூடத்து பிள்ளைகள் வீட்டுக்குபோய் பள்ளிக்கூடம் போக வேண்டாம் என்று சொல்லட்டுமே. அதெல்லாம் இல்லாமல் அவர்கள் அண்ணன் தம்பி மாமன் மைத்துனன் மருமகன் சிற்றப்பன் பெரியப்பன் இவர்கள் ஆபீசுக்கும் கோர்ட்டுக்கும் பள்ளிக்கூடத்திற்கும் போய் சம்பாதிச்சவும் பக்கவும் இருப்பார்கள். வெத்திலைபாக்கு கடையும் ஜட்கா வண்டி ரிக்ஷா வண்டியும் மாத்திரம் வேலை நிறுத்தம் செய்தது என்றால் இது பெரிய பாட்டும் ஏமாற்றமும் அல்லவா என்பதை யோசித்துப்பாருங்கள்.

வெத்திலை:—நீ பார்ப்பார் பேரிலேயே குற்றம் சொல்லுகிறாய்: ஆனால் நீ சொல்வ தெல்லாம் வாஸ்தவம் என்று தான் எனக்கும் படுகின்றது. ஆனால் ஜஸ்டிஸ் கட்சி கூட இந்த புரட்டில் சம்மந்தப்பட்டு விட்டதே அதென்ன காரணம்?

ரிக்ஷா:—ஜஸ்டிஸ் கட்சி இந்தக் கடலை தோற்றுப்போய் விட்டதல்லவா? அதனால் அதற்கு கொஞ்சம் பயம். இப்படி யெல்லாம் முன் பேசியதால் தான் தாங்கள் தோற்றப்போய் விட்டோம் என்று நினைத்துக் கொண்டு மறைமுகமாய் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார்கள். அதென்னவென்றால் பார்ப்பனரல்லாதாருடைய நஷ்டத்தை நிவர்த்தி செய்வதாயிருந்தால் ஒத்துழைக்கக் கூடும் என்றுதானே அவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். அதுகூட வாவேண்டாம் என்கின்றோம். பார்ப்பனர்கள் அதை திருத்திக்கூறுகிறார். எப்படியானாலும் நாம் ஏன் இன்றைய பிழைப்பைக் கெடுத்துக் கொள்ளவேண்டும்?

வெத்திலை:—நீ சொல்வது இரம்பவும் சரி. இதெல்லாம் உனக்கு எப்படி தெரியும்.

ரிக்ஷா—நீங்கள் இங்கேயே உட்கார்ந்திருப்பவர். நான் ஊரெல்லாம் சுற்றுகின்றேன். ஒவ்வொருவரும் என் வண்டியில் இருக்கும்போது இவர்கள் பேசுவதை அவர்கள் பேசுவதை கேட்பதாலும் எனக்கு சந்தேகப்பட்டதை கேட்டுத் தெரிந்துக் கொள்வதாலும் எனக்குத் தெரிகின்றது. தவிரவும் 'குடி அரசு' 'திராவிடன்' முதலிய பேப்பரில் இதெல்லாம் வந்திருக்கின்றது. அதையும் நான் பார்க்கிறதுண்டு.

வெத்திலை—அப்படியா, நான் 'சுதேசமித்திரனை'யும் 'தமிழ்நாட்டை'யும் பார்த்து ஏமாந்துபோய்விட்டதாகத்தானே நினைத்தேன், நல்ல வேளை நீ வந்து விவரம் சொன்னாய், இதோ அவர்கள் வரப்போகிறார்கள். அவர்களைக் கண்டித்து நானே அவர்களுக்குத் தக்கபடி புத்திசொல்லி அனுப்பிவிடுகிறேன். கம்மாயினை அனுப்பி மற்ற கடைக்காரர்களுக்கும் சொல்லி மூடாமல் இருக்கச் செய்து விடுகிறேன்.

ரிக்ஷா—சரி! நான் போய் வருகிறேன். மற்ற சங்கதிகளை சாவகாசமாய்ப் பேசலாம்.

திராவிடன்.

இறந்தவர்களை திருப்தி செய்ய
பார்ப்பனர் வயிற்றை
நிரப்பாதே.

தமிழ்க் கலாசாலைகள்,

தற்காலத்தில் தேச பாஷைகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற கிளர்ச்சி நமது தேசமுழுதும் இருக்கும்போது நமது தமிழ் நாட்டிலும் தமிழ் அபிவிருத்தி செய்யவேண்டும் என்று பிரசங்க மேடைப்பில் கர்ச்சனைகள் உண்டாவதை நாம் கேட்கிறோம் ஆனால் அக்கர்ச்சனைகள அம் மேடைகளை விட்டு வெளிவந்து காரிய ரூபமாக மாறுகின்றனவா என்பதை நாம் கவனிக்க வேண்டும்; ஹிந்தி பாஷையிலும் பங்காளி பாஷையிலும் புது புது கிரந்தங்களை எழுதுவதற்கு தற்கால ருசிக்கு ஒத்த வாறு கவிகள் இயற்றுவதும், பொது ஜனங்களுக்குப் போதிக்க வல்ல மாதாந்திர தினசரிப் பத்திரிகைகளை வெளியிடுவதும், பூத பௌதிக சாஸ்திரங்களுக்கு அவசியமாக இருக்கவேண்டிய நூதன வார்த்தைகளை சேகரிப்பதற்காக சங்கங்களைக் கூட்டுவதும் முதலான அத்யாவசியமான செய்கைகளைச் செய்து செய்துகொண்டு இருக்கிறார்கள். அந்த பாஷைகளைத் தாய்பாஷையாகக்கொண்டு ஆங்கில பாஷையில் நிபுணத்துவம் அடைந்த பெரியார்களும் தாங்கள் எழுதும் அருமையான நூல்களை தங்கள் தாய்ப்பாஷையிலேயே எழுதி அப்பாஷையை அபிவிருத்திக்கு கொண்டு வந்திருக்கிறார்கள். ஈசுவர சந்திர வித்யாசாகர், மது சூதன தத்தர், ரவீந்திர நாத் டாகூர் திஜேந்திர நாத ராயர், பாரதேந்திர அரிச்சந்திர போன்ற பேரியார்கள் ஏன் ஆங்கிலத்தில் எழுதாது தம அருமையான நூல்களை பங்காளியிலும் இந்தியிலும் எழுதினார்கள். இப்பாஷைகளைப் போலவே தெற்கிலும், தெலுங்கு, கன்னடம் இவைகளை அப்பாஷை பேசுகிறவர்கள் பொன்னே போலப் போற்றுகின்றனர். ஆனால் நம் தமிழிலோ கொஞ்சம் இங்கிலீஷ் தெரிந்தாலோ தமிழில் எழுதுவதென்றால் அவமானமாக நினைக்கிறார்கள். 'எனக்கு இங்கிலீஷிலேயே நினைக்கும் தன்மை வந்து விட்டது' என்று பெருமை பேசிக்கொள்ளுகிறார்கள். தமிழில் நல்ல மாதாந்திரப் பத்திரிகை ஒன்று உண்டா? வார்த்தைகள் கண்டுபிடிக்கக் கூடிய கழகங்கள் உண்டா? முதல் நூல்கள் எழுதப்படுகின்றனவா? புது கவிகள் யாராவதியற்றுகிறார்களா? அவற்றை ருசியுடன் வாசித்து அனுபவிக்க படிப்பாளிகள் இருகிறார்களா? இவைகளையெல்லாம் தூண்டிக்கொடுக்க வல்ல கலாசாலைகள் உண்டா? அவைகளை ஏற்படுத்தபிரயத்தனம் உண்டா?

ஆனால் பிரசங்க மேடைகளில் கூக்குரல் இடவும், வேறு பாஷைகளில் எனையோர்கள் அபிவிருத்தி அடைந்ததைப் பார்த்து மனமழுங்கி குணம் மாறவும் சில தமிழ்ச் சங்கங்கள் அங்கங்கே கிளம்பியிருப்பதை மாத்திரம் நாம் பார்க்கிறோம். இச்சங்கங்களில் உள் நுழைந்து பார்த்தால் ஒரு சங்கம் என்று கூறுவதற்கு இருக்க வேண்டிய அனு காணங்கள் பூர்த்தியாகவும் அவைகளில் இருக்க மாட்டா. காலாகாலங்களில் சபைகள் கூட்டி தம்மாலான முயற்சிகளும்

(இதன் தொடர்ச்சி 12-ம்பக்கம் பார்க்க)

குடி அரசு.

சரோடு, பிரபவ-வரு தைமீ 16உ

நெருக்கடியான சமயம்.

பார்ப்பனரல்லாதார்களைப் பொருத்த வரையில் அரசியல் நிலைமையிலும் சமூக இயல் நிலைமையிலும் தற்சமயத்தை பொறுப்புடன் நன்றாய் கவனித்து பார்ப்போமானால் இதை ஒரு நெருக்கடியான சமயம் என்றே சொல்லவேண்டும் என்னவெனில் காந்தியடிகளின் தலைமையில் ஒத்துழையாமையின் போது பல ஆயிரக்கணக்கான தொண்டர்கள் செய்த தியாகத்தின் பலனும் மாய்ந்து மறையக்கிடந்த பார்ப்பனீயமானது பலபார்ப்பனர்களின் சூழ்ச்சியில் ஒருவாறு சமாளித்துக்கொண்டதுடன் ஒத்துழையாமையும் ஒழிக்கப்பட்டு அதன் பலன் முழுவதும் பார்ப்பன ஆதிக்கத்திற்கு அனுகூலமாய் உபயோகப்படுத்தப்பட்டு வந்ததை அறிந்தே ஏறக்குறைய இரண்டு மூன்று வருடங்களாக சில தொண்டர்கள் எழுதிய எதிர்ப்புக்கும் பழிப்புக்கும் அஞ்சாதமுனைந்துநின்று பார்ப்பன சூழ்ச்சியையும் அவர்களைப் பற்றிப் பிழைப்புக்கும் சில பார்ப்பனரல்லாத பல்லுருவிகளின் சுயநல சூழ்ச்சியையும் உள்ளபடி நெல்லிக்கனி போல் பாமர மக்களுக்கு விளக்கிக் காட்டியதின் பலனாய் பார்ப்பனரல்லாதார் சமூகம் அரசியல் தலைவர்கள் என்போர்களின் புரட்டையும் தேசாபிமானம் என்னும் வயிற்றுப் பிழைப்பு ஏமாற்றலின் தன்மையையும் ஒருவாறு அறிந்து கொள்ள இட மேற்பட்டதுடன் சமூக வாழ்விலும் தங்களது தாழ்ந்த நிலை இன்னது என்று உணர்ந்த சுயமரியாதையில் கவலை கொண்டு முற்போக்கடையும் முயற்சியில் மக்களின் கவனம் திருப்பப்பட்டிருப்பதும் யாவரும் அறிந்த விஷயமாகும்

இந்நிலையில் அரசியல் வாழ்வுக்காரர்களுக்கு யோக்கியதையற்றதுடன் அவர்கள் பொது மக்கள் முன்னிலையில் தலைகாட்டவும் வெட்கப்பட்டவர்களாகி மூலையில் ஒடுங்கிக் கிடந்ததுடன் தங்கள் வாழ்க்கையை மாற்றிக்கொள்ள முயற்சித்துக் கொண்டிருந்ததும் யாவரும் அறிந்தவிஷயமாகும்பொய்யும் புரட்டிற்கும் பித்தலாட்டத்திற்கும் நமது நாட்டில் இனியும் கொஞ்சகாலத்திற்கு ஆயுள் இருக்கின்றது என்பதை காட்டுவதற்கு அறிகுறி ஏற்பட்டதுபோல் சைமன் கமிஷன் வருகின்றது என்கின்ற ஒரு சாக்கை வைத்துக்கொண்டு மூலையில் கிடந்தவர்கள் மறுபடியும் வெளிக்கிளம்ப ஆரம்பித்துவிட்டார்கள்.

உதாரணமாக சைமன் என்கின்ற பேச்சு கொம்புலதற்கு முன் சமீபகாலமாக ஸ்ரீமான்கள் வரதராஜுலுவுக்காவது அவரது நண்பர் சத்திய மூர்த்திக்காவது தமிழ் நாட்டில் வெளியில் தலைகாட்ட யோக்கியதை இருந்ததா என்பதை யோசித்துப்பார்த்தால் அரசியல் புரட்டும் அரசியல் வாழ்வும் எவ்வளவு ஆழத்தில் புதைபடக்கூடிய நிலையில் இருந்தது என்பது விளங்கும் ஸ்ரீ வரதராஜு எந்த கூட்டத்திலும் தலைகாட்டாமல் தப்பித்துக்கொள்வதும் மீஞ்சி ஏதாவது ஒரு கூட்டத்தில் தலைகாட்டி தீரவேண்டிய அவசியம் வந்தால் முன் ஜாக்கிரதையுடன் 100, 200 ரூ. செலவுகள்செய்து தூணைக்கு ஆள்களை வைத்துக்கொண்டு தலைகாட்டுவதும் ஸ்ரீமான் சத்திய மூர்த்தி தலைதூக்கினால் "உட்கார் உட்கார்" "யானமில்லையா வெட்க மில்லையா" என்று மானங்கெட்டப் பேசி அமிழ்த்திவைப்பதும் யாவரும் தினமும் தெரிந்து வந்த விஷயமாகும். பொது ஜனங்களும் இவர்களுடைய உபத்திரவம் ஒருவாறு ஒழிந்தது என்று நினைத்துக்கொண்டும் இருந்தார்கள். ஸ்ரீமான் எ. ரங்கசாமி ஐயங்காரோ சுதேசமித்திரனையே விட்டு ஓடவேண்டிய நிலைமை வந்துவிட்டதுடன் அப்பத்திரிகையும் படிப்பதற்கு முன்பாகவே சக்கரை கட்டவேண்டிய நிலைமைக்கு வந்து விட்டது. ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் தற்கொலைசெய்துகொள்ள வேண்டிய நிலைமைக்கு அல்லது "நான் இனிமேல் பொதுவாழ்க்கையில் இருந்து விலகி காயத்திரி மந்திரம் ஜெயிக்க மூக்கைப்பிடித்துக் கொள்ளப் போகின்றேன் என்று சொல்லும் நிலைமைக்கு வந்து விட்டார்.

எனவே அரசியல் வாழ்வுப்புரட்டில் அம்மியும்குழவியும்போல் இருந்தவர்கள் இப்படி ஆகாயத்தில் பறக்கும் நிலைமை ஏற்பட்டுவிட்டபிறகு மற்றவர்களான பழங்கூடையும் முறமும் சுப்பையும் சித்தையும் என்ன கதிக்காளாயிருக்கும்என்பவைகளைநாம் எழுதவேண்டியதில்லை. அதில் சேர்ந்த அநேகர்கள் கூட்டம் கூட்டி ஸ்ரீமான்கள் அய்யங்காரையும் வரதராஜுலுவையும் ரங்கசாமி அய்யங்காரையும் வைத்தும் இவர்கள் அவர்களுக்கு மறுபடியும் பணம் கொடுத்து தப்பித்துக் கொண்டதும் யாவரும் அறிந்ததாகும், தமிழ்நாடு, பத்திரிகையும் அடியோடு மறையும் நிலைக்குவரப் போவதைத் தெரிந்து அதுவும் காங்கிரசை மறைமுகமாய் அதாவது பார்ப்பனரல்லாதாரை ஏமாற்ற சுயராஜ்யக் கக்ஷி என்கின்ற போல் பித்தலாட்டக் கருத்துடன் அதன் அரசியல் கொள்கைகளை வைதுகொண்டும், மற்றொருபுறம் பார்ப்பனர்களை ஏமாற்ற காங்கிரசைப் புகழ்ந்து கொண்டும், தனது தைரியத்தைக் காட்ட ஒருநாளைக்கு ஒருவரை வைதுகொண்டும் மறுநாளைக்கு மன்னிப்பு கேட்டுகொண்டும் இம்மாதிரி நித்தியகண்டமாயிருந்து வந்ததும் யாவருக்கும் தெரியும்.

மற்றொரு பார்ப்பனக்கூட்டம் தங்களுக்கு சமூக ஆதிக்க வாழ்விலும் ஆபத்துவந்து விட்டதென்று பயந்து ஸ்ரீமான் காந்தியை அழைத்துவந்து வருணாசிரமப் பிரசாரம் செய்வித்ததும் அதுவும் பலிக்காமல் போனதும் யாவருக்கும் தெரியும். இந்நிலையில் அதாவது சுற்றிலும் பற்றி எரிந்துகொண்டிருக்கின்ற காலை நெருப்புக்கு மத்தியில் சிக்கின மனிதர்கள்போல் அவஸ்தைப்பட்டு கொண்டிருந்தவர்களுக்கு திடீரென்று பெரு மழை வந்ததுபோல் சைமன் கமிஷன் வரவும் அதைப் பிடித்துக்கொண்டு பாமர மக்களை எய்க்க வெளியில் வந்துவிட்டார்கள் சைமன் கமிஷனால் நன்மைவரப் போகின்றதா தீமைவரப் போகின்றதா? அல்லது அதனுடன் ஒத்துழைக்க வேண்டுமா அல்லது பகிஷ்கரிக்க வேண்டுமா என்பது இந்த வியாசத்தின் முக்கிய கருத்தல்ல. மற்றென்ன வென்றால் தங்களின் யோக்கியதை பாமர மக்களுக்கு வெளியாக்கப்பட்டு பாமரமக்கள் தங்களிடமிருந்து பிரித்து ஒதுக்கப்பட்டு வெளியில் தலைகாட்டுவதற்கு தங்களுக்கு மார்க்கமிலாமல் செய்யப்பட்ட ஒரு கூட்டத்தார்கள் இன்றையத்தினம் சைமன் கமிஷன் என்னும் ஒரு போலி ஆயுதத்தைக் கொண்டு மறுபடியும் வெளியில் வந்து பாமர மக்களுடன் கலரவும் மறுபடியும் அவர்களை ஏமாற்றி பாழாக்கி வாழவும் தக்கதான் சந்தர்ப்பம் கிடைக்கப் போகின்றதே என்பதைப்பற்றிய கவலைதான் முக்கிய கருத்தாகும்.

இதில் உள்ளபுரட்டுகளைப்பற்றிசுமார் 10, 12 வியாசங்கள் குடி அரசிலும், 5, 6 வியாசங்கள் திராவிடனிலும், 2, 3 வியாசம் குமரன், நவசக்தி, காடார்குல மித்திரன் முதலிய பத்திரிகைகளிலும் வெளி வந்ததுடன் சுமார் 10, 15 உபன்யாசங்களும் நடைபெற்றிருக்கின்றன.

"வெற்றிமேல் வெற்றி" "முழக்கத்திற்கு மேல் முழக்கம்" என்று கொட்டைத் தலையங்கமிட்டுஎழுதிவந்த சுதேசமித்திரனும் அவரது சிஷ்யனுகிய தமிழ்நாடும் அதன் வால்களாகிய மற்றும் சிலவும் ஏதாவது ஒரு விஷயத்திற்காவது சமாதானம் சொல்லி வெற்றியை காட்டிற்று அல்லது முழக்கத்தைக் காட்டிற்று என்று பார்த்தால் உலகத்தில் எவ்வளவு தைரியமாய் அயோக்கியத்தனம் செய்கின்றார்கள் என்பதும் அதை நம்புவதற்கு எவ்வளவு மூடர்கள் இருக்கின்றார்கள் என்பதும் இவைகளை வேண்டுமென்றே மறைத்துவைக்க எவ்வளவு துரோகிகள் இருக்கின்றார்கள் என்பதும் வெளியாகிவிடும். இப்படி எல்லாம் இருந்தாலும் இந்த நிலைமையும்கூட நமது பார்ப்பனர்களுக்கு திருப்தியைக் கொடுக்காமல் பயத்தை கொடுத்திருக்கின்றது என்பது நமக்குத் தெரிகின்றது. அதாவது எவ்வளவு தூரம் பார்ப்பன ரல்லாதார்களிலும் சிலர் தங்களுடன் இருப்பதாக காட்டிக்கொள்ள கூடசவுகரியம இந்தாலும் அதாவது ஸ்ரீமான்கள் முத்துரங்கமுதலியார், குழந்தை, ஷாபி மகமது சாயபு, பஷிர் ஆமது சாயபு, அமீத்கான் சாயபு, அண்ணாமல பிள்ளை, வரதராஜுலு நாயுடு, சுப்புசாமி முதலியார், ஓ. கந்தசாமி செட்டியார் போன்றவர்கள் தங்களுடன் இருப்பதாக காட்டிக்கொள்ள சரிப்படுத்தி வைத்துக் கொண்டிருந்தாலும் இவர்கள் ஒருவரிடமும் பார்ப்பனரல்லாத பாமர மக்களுக்கு நம்பிக்கையும் மரியாதையும் இல்லை என்பதை அவர்கள் கண்ணால் உணர்ந்து விட்டார்களானதால் வேறு சில்லரை தங்க

னுடன் சேர்க்கவோ அல்லது பார்ப்பனரல்லாதாருக்குள் மற்றும் சில கக்ஷிகளை உண்டாக்கவோ இதுசமயம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இதைத் தான் மிக்க நெருக்கடியான சமயம் என்று சொல்லுகின்றோம்.

அதாவது சென்ற 10, 12 வருடங்களுக்கு முன் பார்ப்பனரல்லாதார் கட்சி ஏற்பட்டு இப்போதைப் போலவே பார்ப்பனர்களின் சூழ்ச்சியை டாக்டர் நாயர், சர் தியாகராயர், சர் சங்கரன் நாயர் போன்றார்கள் வெளியாக்கி பாமர ஜனங்களுக்கு பார்ப்பனர்களிடம் மதிப்பில்லாமல் செய்து விட்ட காலத்தில் எப்படி பார்ப்பனர்கள் அதாவது ஸ்ரீமான்கள் சர் சி. பி. இராமசாமி அய்யர், எ. ரங்கசாமி ஐயங்கார், டாக்டர் ராஜன், சி. ராஜகோபாலச்சாரி, சி. விஜயராக வாச்சாரி முதலியோர்கள் ஸ்ரீமதி பெசண்டம்மையையும் சேர்த்துக்கொள்ள முயற்சித்தது இதே ஸ்ரீமான் வாதராஜ-ரு போன்றார்களை வசமாக்கிக்கொண்டு அவர்கள் மூலமாய் மக்களை எமாற்றி பார்ப்பனரல்லாதாருக்குள் பிளவை உண்டு பண்ணியதோடு அப்போதும் இந்த சைமன் கமிஷன் போல் அதாவது இதுபோலவே இல்லாவிட்டாலும்இந்திய நிலைமையைவிசாரிக்க பிரிட்டிஷார் முயற்சித்த காலத்தில் பார்ப்பனர்களுக்கு அனுகூலமாய் பார்ப்பனரல்லாதார்களிலே சிலரைப் பிடித்து இங்கு சொல்லுவித்ததல்லாமல் சில பார்ப்பனரல்லாதாருக்கு பணம் கொடுத்து சீமைக்கும் அனுப்பி தங்களுக்கு அனுகூலமாய் வேலை செய்து கொண்டது போல் இப்போதும் ஆரம்பித்துவிட்டார்கள். அதுதான் கோகலே ஹாலில் சில நாளைக்கு முன்பாக ஸ்ரீமதி பெசண்டும் மற்றும் சில அய்யர்களும் கூடி பணக்கால் ராஜா போன்றாரைக் கூப்பிட்டு ராஜி பேச முயற்சித்ததும் அதில் நம்பிக்கையில்லாது போகவே ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார், ரங்கசாமி அய்யங்கார், எம். ஆர். ஆச்சாரியார் போன்ற அய்யங்கார் கொல்லங்கோடு ராஜா, சர் கேவி ரெட்டி நாயுடு, டாக்டர் நடேசன், சிவஞ்ஞானம் பிள்ளை முதலியவர்களை ஆகாவது பார்ப்பனரல்லாதார் கட்சியுடன் முரண்பாடு கொண்டிருப்பவர்களாகப் பார்த்து கூப்பிட்டு பேசி அவர்களுக்கு குல்லாயிட்டு ஒரு கட்சியையும் ஏற்படுத்திவிட்டார்கள். அக்கட்சியில் உள்ளவர்களின் நிலைமையைப்பற்றி 'திராவிடன்' 26—1—28-தி வியாழக்கிழமை தலையங்கத்தில் குறிப்பிட்டு இருக்கும் விஷயத்தை மற்றொரு இடத்தில் பிரசுரித்திருக்கின்றோம். அவர்களில் பெரும் பாலோர் பார்ப்பன சாவகாசமேகூடாது என்றவர்களும் பார்ப்பனர்கள் சமீபத்தில் வீற்றிருப்பது சுயமரியாதைக்கு கேடு என்பவர்களும், பார்ப்பனர்களின் அட்டூழியங்களை அதிகார மதிகாரமாய் பேசினவர்களும் அவர்கள் வலையில் சிக்கி ஏமாந்தவர்களுமே ஆவார்கள். அப்பார்ப்னர்களை அதுவும் - ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார் சத்திய மூர்த்தி போன்றார்களை வானமளாவத் துதிக்கவும் புகழவும் ஏற்பட்டதானது எப்போப்பட்டவர்களுக்கும் சந்தேகத்தைக் கொடுப்பதாகவே இருக்கின்றது. பாமர மக்களுக்குள் இவர்களைப்போற்றிப் புகழ்ந்து இவர்கள் விஷயத்தில் நல்ல அபிப்பிராயம் கொண்டவர்கள் பலர் இருக்கின்றார்களானாலும் நேரே சரியான எதிரியிடம் அதுவும் மானம் ரோஷம் இல்லாத எதிரியிடம் சரண்புகுந்ததானது பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கே பெருத்த மானக்கேட்டை விளைவிப்பதாகவும் பெருத்த அபத்தத்தை உண்டாக்கக்கூடியதாகவும் இருக்கின்றது. இதில் சிலர் ஏமாந்து போய் விழுந்துவிடக்கூடும் என்றே நாம் பயப்படுகின்றோம்.

சர் கே. வி. ரெட்டி நாயுடு அவர்களும் டாக்டர் நடேசம் அவர்களும் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரை புகழ்ந்து பேசி பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் பிணக்கை தீர்த்துவைக்கும்படி அவருக்கு விண்ணப்பம் போட்டுக்கொண்டது வாஸ்தவமானால் அந்த இழிவு பலதலைமுறைக்கு மாறுதென்பதே நமது அபிப்பிராயம்.

எற்கனவே சுயநலத்தின் மூலமாகவும் அதிகாரப் போராசையின் மூலமாகவும் சரியான காரணமில்லாமல் பிளவு பட்டுக்கிடக்கும் பார்ப்பனரல்லாதார்களுக்குள்பார்ப்பன சூழ்ச்சி இப்படி ஒரு கூட்டத்தை தன்வயப்படுத்திக்கொண்டது. 10 வருடங்களுக்கு முன் ஸ்ரீமான் வாதராஜ-ரு போன்றாரை தன் வயப்படுத்திக் கொண்டு செய்த உபத்திரவத்தைவிட இது அதிகமான உபத்திரவத்தைக் கொடுக்கும் என்றே பயப்படுகின்றோம். ஏனெனில் அந்தக் காலத்தில்வயப்படுத்திக்கொண்ட ஆசாமிகள் பெரும்பாலும் வெறும் ஆசாமிகளாக இருந்ததோடு பார்ப்பனர்களாலேயே அவர்களை மனிதர்களாக்கி பிறகு அவர்களைக்கொண்டு பார்ப்பனரல்லாதார்க்கு உபத்திரவத்தை விளைவித்தார்கள். இப்போது அப்படிக்கில்லாமல் ஏற்கெனவே பல விதத்திலும் யோக்கியதையும் அந்தஸ்தும் சற்று செல்வாக்கும் பெற்றவர்களாயிருப்பதால் இவர்களால் முன்னைய விட அதிகமான தொல்லை விளையும் என்றே மறுபடியும் சொல்லுகின்றோம்.

இந்நாட்டு மக்களாகிய பார்ப்பனரல்லாதார் சமூகமானது ஆயிரக்கணக்கான வருஷமாக பார்ப்பனர்களாலும் அவர்களது கொள்கைகளாலும் மிருகத்திலும் கேவலமாய் மதிக்கப்பட்டு மனிதத்தன்மை இழந்து அண்ணிய நாட்டார்களால் மிகக் கேவலமாக மதிக்கப்படுவதை எந்த மனிதனும் மறக்க முடியாது என்று துணிந்து கூறுகின்றோம். இப்படிப்பட்ட சமூகம் தலையெடுக்கும்போதெல்லாம் "உடன் பிறந்தே கொல்லும் வியாதி" என்பதுபோல் எமன்கள் என்று சொல்லப் பட்ட பார்ப் பனர்களுக்கு அனுகூலமாய் நம்மைக் கொல்வதற்கு வியாதிகளாக நம்மவர்களிலேயே சிலரிப்படி ஆளாவது நமது சமூகத்தின் இழிநிலையை காட்டும் அறிகுறியென்றுகூடச் சொல்லுவோம்.

இந்நிலையை நாம் யாரிடம் முறையிட்டுக் கொள்வது என்பதுதான் நமக்கு விளங்கவில்லை. எனவே பார்ப்பனர்களைப் போலாவது அதாவது காங்கிரசைப் போல்வது பார்ப்பனரல்லாதர் எல்லோரும் ஒன்றுகூடி நமக்குள்ள குறைகளை இன்னது என்று வெளியார்களுக்கோ தெரிவிக்கக்கூட யோக்யதை இல்லாத நிலையில் இருக்கின்றோம். ஆதலால் இன்னிலைமையை உணர்ந்து பார்ப்பனரல்லாத பாமர மக்களாவது ஒன்றுசேர்ந்து ஏதாவது ஒரு ஏற்பாடு செய்து நமது குறைகளையும் தேவைகளையும் குறித்து ஒரு திட்டத்தை ஏற்படுத்தலாமா என்றும் அல்லது நமது நிலையைப்பற்றி மிஸ் மேயோ அம்மையார் தயாரித்து உலகதாருக்கே சமர்ப்பித்திருக்கும் "இந்தியத் தாய்" என்கின்ற புஸ்தகத்தையே நமக்கு பிரதிநிதித்துவம் என்று சொல்லி அதற்கு பரிகாரம் செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்ளலாமா என்றும் கேட்கின்றோம்.

இனி நாம் சும்மா இருப்பது மிகவும் வெட்கக் கேடானதும் பொறுப்பற்றதமான காரியமாகும். அன்றியும் விடிய விடிய விழித்துக் கொண்டிருந்து விட்டு திருடன் வரும்போது தூங்கிவிட்ட அவ்வளவு முட்டாள்தனமானதுமாகும்.

பார்ப்பனர்களின் மற்றொரு சூழ்ச்சி.

நம் நாட்டு பார்ப்பனக் கொடுமைகளை சகிக்க மாட்டாமல் 10 ஆண்டுகளுக்கு முன்னர் நமது பெரியார்களான சர் தியாகராயரும் டாக்டர் நாயர் பெருமானும் கூடிப்பார்ப்பனரல்லாதார் மக்களின் விடுதலைக்காக பார்ப்பனரல்லாதார் இயக்கம் அதாவது சென் அந்திய நலவுரிமைச் சங்கம் என்பதாக ஒன்றை தோற்றுவித்து மக்களுக்கு பார்ப்பன சூழ்ச்சியை விளக்கி வந்த காலத்தில் பார்ப்பனர்களில் சிலர் அதாவது ஸ்ரீமான்கள் சர் சி பி இராமசாமி அய்யரும், சி ராஜகோபாலாச்சாரியாரும், கஸ்தூரிரங்கய்யங்காரும் மற்றும் பலரும் சேர்ந்து, இச்சங்கத்துக்கு விரோதமாய்ச் சில பார்ப்பனரல்லாத ஆசாமிகளை பிடித்துசென்னை மாகாணச்சங்கம் என்பதாக ஒரு போலிச் சங்கத்தை ஏற்பாடு செய்வித்து அதற்கு வேண்டிய பொருளுதவியும் செய்து பல பிரசாரகர்களுக்குக் கூலி கொடுத்து நீங்கள் நமது சங்கத்தையும் நோக்கத்தையும் பழித்து நிந்தித்துக்கூறி நம்களால்கூடாமான இடைஞ்சல்கள் செய்து வந்தது யாவரும் அறிந்த விஷயமாகும்.

நம் நாட்டு பார்ப்பனரல்லாத மக்களின் நல்ல காலமானது இவற்றை எவையும் லட்சியம் செய்யாமல் நமது இயக்கம் வளர்ச்சி பெற்றுப் பாமர மக்களுக்குப் பார்ப்பன சூழ்ச்சியை உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளக்கி விட்டது. இப்போது ராயல் கமிஷன் வருகிற சமயத்தில் உம்தியோக ஏமாற்றம் கொண்ட சிலர் இந்தச் சங்கத்துக்குள் இருந்தே சில்லரை விஷமம் செய்து கொண்டிருப்பதை பார்ப்பனர்கள் தங்களுக்கு அனுகூலமாக்கிகொண்டுமுன்போல இப்போதும் ஒரு புதிய சங்கத்தை ஆரம்பிக்கத் தீர்மானித்து தைரியமாய் வெளியில் வந்துவிட்டார்கள் அதாவது நேற்று முன்தினம் கோகலே ஹாலில் சில பார்ப்பனர்கள் ஒன்று கூடி பார்ப்பனரல்லாத பொது மக்களை ஏமாற்ற ஒரு கட்சி ஏற்படுத்திவிட்டார்கள் அதாவது ராஜா கொல்லொங்கோடு, சர் கே வி ரெட்டி நாயுடு, சர் சிவஞானம் பிள்ளை நுணும்பேட்டை ஜெமின்தார் டாக்டர் நடேச முதலியார் முதலியவர்களைப் பிடித்து பார்ப்பன பார்ப்பனரல்லாதார்களுக்கு மாஜி ஏற்படுத்தப் போவதாகவும் அதற்கு ஒரு கமிட்டி நியமித்திருப்

பதாகவும் தீர்மான செய்திருக்கிறார்கள் இதற்கு சுத்திர-தாரிகளாகபுரீமான்கள் சர் சி பி ராமசாமி அய்யர் எஸ் சீனிவாசய்யங்கார் சத்திய மூர்த்தி எ ரங்கசாமி அய்யங்கார் முதலியவர்களே இருந்திருக்கின்றார்கள் என்பதை அங்குக் கூடி உள்ள கூட்டத்தைப்பார்த்தாலே விளங்காமல் போகாது.

பார்ப்பனர்— பார்ப்பனரல்லாதார்களின் ராஜிக்கு ஸ்ரீமான் கொல்லாங்கோடு ராஜா எப்படி முக்கியமானவராகக்கூடும் என்பது நமது கேள்வி. அவர் பார்ப்பனர்களோ உயர்ந்த ஜென்மம் என்றும் அவர்களுக்குப் பின்னாயர் பிறப்பதே புண்ணிய ஜென்மம் என்றும் சொல்லப்படும் கொள்கையை கண்டிக்கத்தரியமில்லாதவர் அடுத்தபடியாக சர் சிவஞானம் பிள்ளை அவர்களும் அக்கூட்டத்திற்கு முக்கியமானவர் அவர்மந்திரியாயிருக்கும் போதே ஒரு பார்ப்பன உத்தியோகஸ்தர் அல்லது வெள்ளைக்கார உத்தியோகஸ்தர் அவரிடம் ஏதாவது வேலையாய்வந்தால், உடனே எழுந்து நின்றுபேசுபவர். பார்ப்பனர் உயர்ந்த ஜாதி என்றும் தான் அதற்கு அடுத்த ஜாதி என்றும் நினைத்துக்கொண்டிருப்பதும் பார்ப்பன பக்தியோடு பார்ப்பனர்களின் பேச்சைக் கேட்டு சட்டசபை எலக்ஷனில் தான் செலவழித்த ரூபாய்களே யெல்லாம் தோற்றுவிட்டு மறுபடியும் பார்ப்பனர்கள் தயவால் முன்னுக்குவரநினைத்துக்கொண்டிருப்பவருமானவர் அடுக்காப்போல்சர் கே வி ரெட்டி நாயுடுவோ அனந்தப்பூரில் ஒவ்வொருவரும் காங்கிரசில் சேரவேண்டும் என்று சொன்னார் அடுத்த படியாக காங்கிரஸ் பிராமணசங்கம் என்று சொல்லி கோயமுத்தூர் மகாநாட்டு தீர்மானத்தை ஒப்புக் கொள்ளக்கூடாது என்றார்

அதற்கு அடுத்த நான்சுயமரியாதையுள்ளபார்ப்பனரல்லாதார்பார்ப்பனர்களுக்குப் பக்கத்தில் உட்காருவதே தங்கள் சுயமரியாதைக்கு குறைவு என்றார் இப்போதோ தினம் தினம் அவர் பார்ப்பனர்கள் வீட்டிற்கு கோவிலுக்கு போவது போல் போய்க் கொண்டு வருவதுடன் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரை ஒரு காஷ்மீர் சால்வை வாங்கினவிதான் போல் புகழ்ந்து இருக்கிறார் டாக்டர் நாயர் முதலியாரோ முதலில் பார்ப்பனரல்லாதார் கட்சியை விட்டு வெளியே போய் பார்ப்பனர்களுடன் சேர்ந்து கொண்டு பார்ப்பனரல்லாதார் கக்ஷியை ஆசை தீர வைது விட்டு மறுபடியும் கட்சிக்கு வந்து கட்சித்தலைவர்களை புகழ்ந்தவர் பிறகு கட்சியகுறை கூறினவர் மறுபடியும் கோயம்புத்தூர் தீர்மானத்தை ஒப்புக் கொண்டவர் கட்சிக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்று உபதேசம் செய்தவர் இப்போது கோயமுத்தூர் தீர்மானத்தை சர் கே வி ரெட்டியுடன் சேர்ந்து கொண்டு கண்டிக்கிறவர் எந்த காரணத்தைக் கொண்டும் பார்ப்பன சாவகாசம் ஆகாது என்றவர் இப்படியிருக்க ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்காரையும் சர் சி பி யையும் தலைவராக கொள்ள விளம்பரம் போட்டுக் கொண்டிருப்பவர் இவ்வளவும் தவிர ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் இத்துமுல்லீம் ஒற்றுமைக்குப் பாடு பட்டு வெற்றியடைந்தது போல பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் ஒற்றுமைக்கும் பாடு பட்டு வெற்றியை அளிக்க வேண்டுமென்று சர் கே வி ரெட்டியார் அய்யங்காருக்கு விண்ணப்பமும் போட்டிருக்கிறார் ஏனவேஇதில் இருக்கும் புரட்டுகளையும் ரகசியங்களையும்மற்றும் அதில் சேர்ந்துள்ள ஆசாமிகளின் நிலைமையையும் அவர்களது கருத்துகளையும் சாவகாசமாக வெளியிடக்காதிருக்கின்றோம் மொத்தத்தில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் ஒற்றுமையை உண்டாக்க இரண்டு சமூகத்திற்கும் பிரதிநிதிகளாக இருக்க அதிலுள்ள இந்த இரு சமூக கனவான்களுக்கும்யோக்கியதை உண்டா என்பதையும், சர் சிபி ராமசாமி அய்யர்ஸ்ரீனிவாசய்யங்கார்சத்தியமூர்த்தி. எ ரங்கசாமி அய்யங்கார், எம் கே ஆச்சாரியார் ஆகியவர்களை நம்பலாமா என்பதும் அப்படி நம்புவது கண்டைச்சட்டி ஈரியைக் காவல் வைத்ததுபோலல்லவா என்பதையும் பொது ஜனங்கள் கவனித்து பார்த்து ஏமாறாமலிருக்கும்படி இது சமயம் எச்சரிக்கை செய்கின்றோம் முடிவாகநமது காட்டுக்கு ஒவ்வொரு சீர்திருத்தமோ சமிஷ்டியோ வரும்போதெல்லாம் பாப்பார்ப்பனர்கள் இது போலவே பார்ப்பனரல்லாதாரில் சில ஆசாமிகளைப்பிடித்து நமக்குள் அபிப்பிராய பேதத்தை ஏற்படுத்தி புதுப்புது சூழ்ச்சிகள் செய்து தங்கள் காரியங்களை சாதித்துக் கொண்டு வந்திருக்கின்னர் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டுகிறோம்.

திராவிடன்.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துக் கொள்ள ஆள்களும் ஆக்கமும் ஊக்கமும் கிடையா. இவ்வாறு இருந்தால் அபிவிருத்தி எங்கு உண்டாகும். சில காள்களுக்கு முன்பு ஆந்திர சர்வகலாசாலை ஏற்படவே அதைப்போல தமிழ்கலாசாலையும் ஏற்படவேண்டும் என்று கிளர்ச்சி உண்டாகி அதை அனுசரித்து ஒரு ஆலோசனை மன்றமும் வேலை செய்ய முயன்றது. அதன் முயற்சியின் பயன் இன்னமும் தெரியவில்லை. அவ்விதச் சர்வகலாசாலை ஒன்று ஏற்படுத்துவதற்கு உள் ஆகவாக அங்கங்கே தமிழ்க் கலாசாலைகள் ஏற்பட்டிருக்கின்றனவா என்று யோசிக்க வேண்டும். இவ்விஷயத்தில் நம் பெரியோர்கள் என்ன முயற்சிகள் எடுத்துக் கொண்டனர் தமக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தை எது காறும் பயன் படுத்திக் கொண்டனர் என்பதை ஆராய்வாம்.

சுமார் 15 வருடங்களுக்கு முந்தி ஏற்பட்ட சர்வகலா சங்கத்தச் சட்ட மாறுதலில் கீழ்நேச் பாஷைகளுக்கு (Oriental Languages) தனி பரீட்சைகள், பட்டங்கள், கலாசாலைகள ஏற்படுத்த வசதிகள் செய்திருந்தனர். அந்த சட்டததை அதிகமாக விரித்தும பெருக்கியும் 1920ம் வருடத்தில் ஏற்படுத்தி இருக்கின்றனர். இவ்விதமாக கிழ்த்தேசப் பாஷைகளுக்குகொடுக்கப்பட்ட அனுகூலங்களை யார் யார் பயன் படுத்திக்கொண்டார்கள்? எப்போதுமே தன்னலமும் ஊக்கமும் கொண்டிருக்கும் பிராமணர்கள் வடமொழியை விருத்திசெய்வதற்கும் தேசத்தில் அக்கல்வி பரவச் செய்வதற்கும் பல பாடசாலைகளை ஏற்படுத்திக்கொண்டார்கள். காவிய பாடசாலைகள் என்ன, வேதபாடசாலைகள் என்ன இவைகள் அங்கங்கே தோன்றின. அவைகளைப்பரீட்சை செய்ய ஒரு தனி உத்தியோகஸ்தரும் நியமிக்கப்பட்டனர் என்றால் அபிவிருத்தி எவ்வளவு அதிகம் உண்டாயிற்று பாருங்கள். இவைகளை பெருஞ் செல்வர்களும் வைதிகர்களுமே யன்றி ராஜாக்கா போர்டார்களும் பெண்பிள்ளைகளும் சில பிராமணரல்லாதார்களும் ஏற்றுகொண்டிருக்கின்றனர் என்றால் அச்சனங்களின் ஊக்கம் எவ்வாறு இருக்கும். ஆனால் இதற்கு மாறுக எவ்வளவு தேவார பாடசாலைகள் இருக்கின்றன, சிதம்பரத்தில் உள்ள இரண்டு தமிழ் பாடசாலைகளை தவிர வேறு எதுவும் கிடையாது. அப்படியானால் தமிழ் மக்கள் பெருமை காரியத்தில் எங்கே?

மேலும், 1-4-27 தேதியில் அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி நமது மாகாணத்தில் 157 கீழைப்பாஷைக்கலாசாலைகளில் 2 தமிழ்க்கலாசாலைகளைத்தவிர வேறு 155ம் வட மொழிப்பாடசாலைகளே. அவற்றில் 19 கலாசாலைகளும் 27 உயர்தரப் பாடசாலைகளும் 109 ஆரம்பப் பாடசாலைகளும் இருக்கின்றன. அவைகளை நடத்தும் தலைமைகள் விவரம் வருமாறு:—

பாடசாலைகள் தலைமை	ஆண்	பெண்
பிராமணர்கள்	108	9
போர்ட்கள்	8	1
பிராமணர் அல்லாதார்	30	1
மொத்தம்	146	11

பிராமணர் அல்லாதாரில் 17 பாடசாலைகள் மலையாள ஜில்லாவில் இருக்கின்றன, அவைகளை நடத்துகிறவர்கள் பெரும்பாலும் நாயர்களும் தென் கன்னடத்தில்பண்டகளும் மேவட மொழிப்பயிற்சி அதிகம் என்பது தெரிந்த விஷயம். மற்ற வகுப்பாரில் பல்லாரியில் இரண்டு லிங்காயத்துகளும் சென்னையில் ஒரு வைசியரும் வட மொழிப்பாடசாலைவைத்திருக்கின்றனர்.

அதிகமான பாடசாலைகள் கொண்ட சில ஜில்லாக்களை இங்கே எழுதுகிறேன்.

தென்கன்னடம்	25	மலையாளம்	21
கீழ் கோதாவரி	20	திருநெல்வேலி	14
சலேசம்	13	தஞ்சாவூர்	10
விசாகபட்டணம்	9		

இந்த எண்களைக் கொண்டே சில விஷயங்கள் சொல்லாமலே தெரியவரும். நிலஸ்தாபன சங்கத்தார்கள் (போர்டுகள்) ஏற்படுத்தியவை வருமாறு.

மேல் கோதாவரி	3	கிருஷ்ணை	1
தஞ்சை	1	திருநெல்வேலி	3
மலையாளம்	1		

இவைகளைக் கவனித்தால் பெரும்பாலும் பிராமணரல்லாதார் இருக்கக்கூடிய அச்சங்களில் வடமொழிப் பாடசாலைகள் ஏற்படவும் தமிழ் பாடசாலைகள் ஏற்படாமல் இருக்கவும் காரணம் என்ன? தமிழர்களின் அபிமானம் இன்மையும் ஊக்கம் இன்மையுமே காரணம் அன்றோ?

இனி இதைப்பற்றி அதிகமாக எழுதுவதேன். தமிழர்களுக்கு சுயமரியாதை இருக்குமானால் ஏன் இவர்கள அதிகமாக பாடசாலைகளை ஏற்படுத்த முயலக்கூடாது? ஏன் ஸ்தலஸ்தாபனங்கள் மூலமாகவும் இம்முயற்சிகள் எடுத்துக்கொள்ளக் கூடாது? வெறும் பேச்சுகளில் என்ன பயன்? காரியங்களில் காட்டவேண்டாமா?

C. M. ராமச்சந்திரன் செட்டியார்.

நேயர்களே!

இவ்வாரம் எதிர்பாராத சில அசௌகரியங்களால் 16 பக்கங்களே வெளியிடுவதாக இருந்தோம். ஆனால் விஷயங்களின் முக்யாம்சத்தைக் குறித்து ஒரு நாள் தாமதமாயினும் 20 பக்கமே வெளியிடுவதாக முடிவு செய்து வழக்கம்போல் 20 பக்கமே வெளியிட்டிருப்பதால் 15, 16 என்றிருக்கும் கடைசி இரண்டுபக்கங்களின் நம்பரை 19, 20என்று திருத்திக்கொள்ளவேண்டுகிறோம்.

கோபிசெட்டிபாளையம் தாலூக்கா போர்டும் ஆதிதிராவிடர்களும்.

கோபிசெட்டிபாளையம்பவானி ஆகிய இருதாலூக்கா போர்டு தொடங்கிய முதல் கொண்டு ஆதித் திராவிடர்களுக்கு நாமினேஷனிருந்தும் இத்தாலூகாக்களில் பெரிய ஜனசமூகமுள்ள ஆதிதிராவிடர்களில் ஒரு பிரதிநிதியேனுமில்லாமலிருப்பதுஒருகுறை யாகும். இக்குறைவால் ஆதித்திராவிடர் கள்போடும் விண்ணப்பங்களுக்குப் பதிலேவராமற்வருந்துகிறவர்களாகஇருக்கின்ற னர்உதாரணம் பவானிதாலூக்கா அந்தியூருக்கு அடுத்த புதுப்பாளையத்தில் சுமார் நாற்பது வீட்டுகுகாரர்கள் ஆதித் திராவிடர்கள் தண்ணீருக்கு கண்ணீராய் அழுவதினால் பிழைக்கும் ஜீவியமும் கெட்டுபட்டினி கிடந்து வருவதாக பல பிட்டீஷன்கள் எழுதியும் சென்ற ஆடி மாதம் ஈரோடு குடி அரசு' பத்திரிகையில் பிரசுரப் செய்திருந்தும் நாளது பரியந்தம் யாதொரு பதிலுமில்லை இந்த திக்கற்ற ஏழைகள் விண்ணப்பத்துக்கு தாலூக்கா போர்டில் ஆதித் திராவிடர்களுக்கு 1 மெம்பரிருந்தால் இம்மாதிரி பிட்டீஷன்களுக்குப் பதிலில்லாமலிருந்திருக்காது கோபிசெட்டிபாளையம் டிவிஷன் தாலுக்கா போர்டுக்கு 2 ஆதி திராவிட பிரதிநிதிகளை நாமினேஷனில் எடுக்கும்படியாய் மகா-ரா-ஸ்ரீ கோபிசெட்டிபாளையம் டிவிஷன் டிப்டி கலெக்டர் அவர்களுக்கு மனுச்செய்து கேட்டிருக்கிறது இரு தாலுக்காவிற்கும் ஆதி திராவிடர்களில் இரண்டு பிரதிநிதிகள் நியமித்தால் இவர்களின் துன்பம் நீங்கி சுகமடைந்து ஆதிதிராவிடர்கள் முகவரைஷில் முன்னேறிச் செல்லுவார்கள் அப்படிக்கின்றி வேறும் பேச்சு பயன்தராது. பெருந்தலையூரில் 120 வீட்டுக்காரர் ஆதித் திராவிடக் குடிகளிருந்தும் டிஸ்திரிக்ட் பஞ்சயத் கோர்ட்டில் ஒரு பிரதிநிதியேனுமில்லை காருண்ணியம் பொருந்திய கவர்மெண்டார் அவர்கள் கவனித்து தாலுக்கா போர்டுக்கு 2 மெம்பர்களும் பெருந்தலையூர் திரிக்ட பஞ்சாயத் கோர்ட்டுக்குஒருபிரதிநிதியும் நாமினேஷனில் எடுத்து ஆதரிக்கதாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம் என்று பெருந்தலையூர் கெ. எம் தானியேல் மேஸ்திரி தெரிவித்துக்கொள்ளுகிறார்.

என். தண்டபாணி Co.

நம்பிக்கையான வர்த்தக ஸ்தலம்.

இங்கிலீஷ் தேசத்தார் துணிகள், சகலவித புத்தகங்கள், மருந்துகள், ஷாப் சாமான்கள் முதலியன எல்லாம் சுயமாயும் நல்லதாயும் கிடைக்கும்.

தேவைக்கு எழுதுங்கள்

(திருப்தி இல்லாத சாமான்கள் திரும்ப வாபீஸ் பெற்றுக் கொள்ளப்படும்).

குறிப்பு:—புத்தகங்களைத் தவிர்த்த மற்ற சாமான்களுக்கு ரூ. 100-க்கு 25 வீதம் முன்பணம் அனுப்புதல் வேண்டும்.

விலாசம்:— என். தண்டபாணி பிள்ளை,
தபாற் பெட்டி 292, சைனபஜார், நெ. 292,
மதராஸ்

வாழ்த்து.

விருதுநகர் நாடார் பரிபாலன சங்கம் வருஷக் கோண்டாட்டத்திற்கு நாடார் மகாஜன சங்கத்தலைவர் ஸ்ரீமான் வி கனகசபை நாடார் அவர்களுக்கு சங்கீத வித்வ ரத்தினராஜா வி ஏ சின்னமணி பாகவதர் அவர்கள இயற்றிய வாழ்த்து.

[கல்யாணம்செய்துவையுமே என்ற மெட்டு]

நாடார் பரிபாலனசங்கம்
நம் நாட்டுத் தங்கம்

வாடாதுலகினில் தன்குலமோங்க
வழிபுகழ் பெருமையை தினமுமே தாங்க
மூடவழக்கங்களும் மழிந்தேதுங்க
முயலுமே இதுதினம் கதந்தரம் வாங்க ()

தேசநலங்களருகி செய்திடும் முயற்சி
செழிக்கவே இச்சங்கம புகட்டிடும்பயிற்சி
பேசிடும் சுயமரியாதையின் விளர்ச்சி
பெருகிடும் வாலிபர்முழுக்கிடும் வளர்ச்சி(நா

தனக்கொன்று பிறர்க்கொன்று சமத்துவ
பேதம்
சரியற்ற முறையென்று பூரிந்திடும் வாதம்
பிணக்கிலாதெழுந்திட பிரசார கீதம்
பிரியமுடன்புரிய வரும் சுயநாதம் (நா)

எட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது
யென்றுணர்ந்தால் பாழும் புராணமும் நீது
வீட்டுக்குப்புரோகிதம் வேண்டுமுவர்கேது
வினங்கிடும் பிராமணர் செய்திடும் சூது (நா)

அஞ்சாது சுயமரியாதையின் போரு
அனைவரும் செய்ய பூப்படுவதே பேறு
தஞ்சமிதுவே நடராஜனுக்கோறும்
தமிழ் சின்னமணிஜபம் தனைக்குமே
பாரு (நா)

மாயவரம்
பிராமணரல்லாதார் நலஉரிமைச் சங்கம்

மாயவரம் பட்டமங்கலத் தெருவிலுள்ள சங்க காரியாலயத்தில் 7-1-28 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு திருவாளர் டி சங்குண்ணி நாயர் அவர்களின் தலைமையில் கூடி இப்புது வருஷத்திற்கு நிர்வாகிகள், தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

இன்று புதுவருஷக் கமிட்டியார்களின் தேர்தல் நடந்த முதல் கூட்டத்திலேயே, தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லாதார் மகா நாட்டை நடத்தும் பட்டுக்கோட்டையிலேயே, நம்மவர் இளைஞர் மகா நாட்டையும் மற்றும் அவசியமான எல்லா கூட்டங்களையும் சேர்த்து நடத்துவது அவசியமாயும் பல சௌகரியத்துக் கிடமாயும் பெருமையாயும் இருக்கிறதாக தீர்மானிக்கிறது

வி. கோபாலன்
காரியதரிசி

பொய்யான புரோகித பார்ப்பனர்களை

ஒரு நாளும் நம்பாதே.

ஆங்கிலத்திலும் தமிழிலும் மாதம் இருமுறை வெளிவரும் ஓர்சிறந்த

ஆதிதிராவிட காவலன்

என்னும் பத்திரிகையை ஆதரியுங்கள்.

உள்நாடு வருட சந்தா ரூ. 2. } தனிப்பிரதி
வெளிநாடு ,, ரூ. 3. } ஒரு அணா.

முன்பணம் அனுப்பி பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளலாம். மற்ற விபரத்திற்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ஆர். வீரையன்,
பத்திராதிபர்,
'ஆதிதிராவிட காவலன்'
கோயமுத்தூர்.

பெண்களுக்கு அழகு.

உயர்ந்த மல்லில் பச்சை, புளு, வயலெட், சருப்பு, கெம்பு, ரோஸ் கலர்கள், கெட்டிச்சாயம். பளபளப்பான ஸீகரத் தோற்ற முள்ளது.

18 மு. x 48 இஞ்சு கலர் புடவை ரூ. 4—4—0
ஷே சன்னடி ,, ரூ. 4—12—0
18 மு. x 44 இஞ்சு கலர் புடவை ரூ. 3—8—0
ஷே சன்னடி ,, ரூ. 3—12—0

புதிய ஜவுளி கேடலாக் இலவம்!

The Madura Oriental Trading Co.,
Laxmi Cloth Store, MADURA.

"குலாபிமானி"

இது ஒரு இனிய செந்தமிழ் மாதப்பத்திரிகை திருச்சி தத்தமங்கலம் ஸ்ரீமான் ஏ எம் முத்துசாமி பிள்ளையவர்கள் இதன் பத்திராதிபர் அவர் சிறப்பாக ஆறுநாட்டு வேளாளர் முன்னேற்றமும் பொதுவாக தமிழ் நாட்டாரின் முன்னேற்றமும் கருதி கல்வி உழவு வாணிபம் முதலியவைகளைப் பற்றிய கட்டுரைகள் கொண்டொளிரும் வருட சந்தா ரூ1— பத்திராதிபர்,

"குலாபிமானி" ஆபீஸ்
சின்னக்கடைத்தெரு, திருச்சி

டிடக்டாஸ்

அல்லது

துப்பு இரகசியம் அறியும் கருவி.

இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன்மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை எக்காலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவனை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.

இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் ஷே கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி. டி., மதராஸ்

7 பக்கத் தொடர்ச்சி

இவ்வளவு பொருள் கொடுக்க வேண்டும் ஒவ் வொரு கூட்டத்திற்கும் முதல் குரு பிராமணன் தான் அவனுக்கு கல்யாணமான குடும்பஸ்தர்கள் வருடா வருடம் வரி கொடுத்து வரவேண்டும் தோஷத்துக்கு பூசை செய்கிறவன் பிரமணனாக இருக்க வேண்டும் அதில் இன்ன இன்ன அர்ச்சனை செய்ய இன்ன பலன் அதற்கு வரி இவ்வளவு இன்ன தன்மை லொக குருவென்று ஒருவருண்டு அவர் இந்த ஹிந்து மதத்தை ஏற்படுத்தியவர் அவருக்கு எல்லோரும் பணம் ரூபாய்களைக்கொண்டு அர்ச்சனை செய்ய வேண்டியவைகளைப்பற்றி சான்றுகள் பாமரமக்களும் பார்வை அதற்குச்சான்றுகளும் முன்காலத்தில் ராஜாக்கள் நடந்திக காட்டியதாக புராணங்கள் அதற்குச்சாவுக்கு ஒரு சூளுரை சொல்வதுபோல் மான அதை செய்திருப்பானேன் இன்ன பாவத்துக்கு இன்னவென்று சொல்வது போலவும் எழுதி வைத்துக் கொண்டு அந்தக் கட்டுக் கதைகளை கையருகு கடவுளால் சொல்லப்பட்டதாக ஆதாரவாக காட்டி இவர்கள் ஒருபக்கத்திலிருந்து மறுபக்கத்திற்கும்ஒருஊரிலிருந்து மறுஊருக்கும்போகும் போது வழியில் சாப்பாட்டுக்காக வேண்டி ராமண போஜன சாலைகளையும் அன்னசத்திரங்களையும் ஒன்றுமறியாத ராஜாக்களையும் பணக்காரர்களையும் தொண்டு கட்டி வைத்து சத்திரம்சொந்த காபர்கூட அந்தசத்திரத்தில் சாப்பிடுவது தோஷம் என்று வேறே சமையலோ அல்லது ஓட்டல் சோறோ வாங்கி வந்து சாப்பிடுபடியாக செய்திருப்பதான அவர்களுடைய முன் யோசனையையும் கூர்மையான தந்திரத்தையும் மெச்சவேண்டியதேதான்.

ஆனால் ஏமாறுகிறவர்கள் உலகத்திலிருந்தால் நாமும் நம் சக்தியனுசாரம் ஏமாற்றத்தான் பார்ப்போம். ஆனால் நமக்கு ஏமாற்ற ஆள் கிடையாத குறைதான். ஆகவே பிராமணர்கள் பேரில் குற்றம் சொல்லுவது தப்பு. குற்ற மெல்லாம் நம்முடையது. நமக்கு பகுத்தறிவு வந்து இதெல்லாம் அப்படி மூடக்கொள்கை என்று நாம் சுயமரியாதையை நாடி நமக்கு நாமே எஜமான் எனக்கு மேற்பட்டவன் ஐயருமல்ல ஆச்சாரியுமல்ல என்ற தெளிவுவந்து விட்டால் பாவம் ஏழை பிராமணர் நம்மை அடிப்பதுமில்லை பிடிப்பதுமில்லை அவர்களும் "இனி இந்த ஏமாற்றப் பிழைப்புக்கு வழியில்லை" யென்று நினைத்து "சரியும் நானும் ஒன்று தான், இருவரும் சமம் தான் உன் கஷ்டம் என் கஷ்டம் உன் சுகம் என் சுகம்" என்று படியை விட்டு இறங்கி விடுவார்கள் அதைவிட்டு இன்னமும் புராணம், வேதம், மனு, ஸ்மிருதி இவைகளை நம்பிகொண்டு பணப்பையை திறந்து வைத்துக்கொண்டிருந்தால் இன்னும் எத்தனை 'குடி ஆசு', எத்தனை நாயக்கர், எத்தனை கைவல்ய சுவாமியார், எத்தனை 'தாலிடன்' எத்தனை கண்ணப்பர் வந்தாலும் நாம் அடிமை அடிமையே. பூணூல் போட்ட பிராமணர் எஜமான் எஜமானே.

அதைத்தான் சொல்லுகிறேன்.

"ஐயோ! நிதி என்று ஆரம்பித்து

ஆயிரக்கணக்கான குஷ்டரோகிகளை குணமாக்கினவர்!
உலகப்பிரசித்திபெற்ற பரம்பரை வைத்தியர்!!
வைத்திய ஆசிரியர் பட்டம் பெற்றவர்!!!
அநேக டாக்டர்களாலும், பல பிரபுக்களாலும் நன்கு மதிக்கப் பட்டது. சகல வியாதிகளுக்கும் கைகண்ட

பழநி சி. எம். சாமி முதல் நெ.

குருதாம்பர பஸ்பம்.

இது அபார சக்தி வாய்ந்தது. குஷ்டம், மேகம், ரணம், திமிர், சூலை, கிரந்தி, மகமதப்பு, பத்தகம், சதிப்புகள், பிளவை, ஆறாத குழிப்புண், பவுத்திரம், கண்டமாலை முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். வி. பி. வேறு.

100 வேளை டப்பா அனுபானத்துடன் ரூ. 50
50 வேளை ரூ 25. ஏழைகளுக்கு பாதி விலை.

என் கடையிலிருக்கக்கூடிய ஒரு பையனுக்கு 2, 3 வருஷமாயிருந்த குஷ்டரோகப் புண்கள் எல்லாம் தங்கள் குருதாம்பர பஸ்பத்தால் பூர்ணகுணமாயிற்று.

K. K. பக்கிரி முகமது காப்பர் F. M. S. 12—8—27.

தாதுபுஷ்டிக்கு நிகரற்ற பழநி சி. எம். சாமி,

மன்மத கோலாகல குளிகை.

பரீக்ஷிக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

தாதுபுஷ்டிக்கு இது நிகரற்றது. இதற்கு நிகரான மருந்து பலியிலெங்குமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். இல் வாழ்வில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. 120 குளிகை விலை ரூ. 10. 60 குளிகை ரூ. 5. மாதிரிக்கு 20 குளிகை ரூ. 2. வி. பி. சார்ஜ் வேறு.

ஏராளமான சற்சாட்சிகளையும் பெரிய அபீஸர்களின் சற்சாட்சிகளையும் கேட்டால் காண்பிக்கலாம்.

சித்த ஆயுர்வேத வைத்திய ஆசிரியர். C. மலையப்பசாமி. நித்தியானந்த வைத்திய சாலை,

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:- முருகன் எஜன்ஸி, 43 அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை.

அதை முடிப்பதற்குள் வேறென்ன என்ன மோ சொல்லப் போய் விட்டீர்" என்று கோபிக்காதீர்கள். இப்போது சொன்ன வைகளும் அந்நியனுடைய அண்ணன் தம்பிகளானபடியால் அதைசற்று விளக்கினேன்.

நிற்க முதலாவது நிதி செய்வதே மிகவும் பொருத்தமற்றது. அதிலும் இப்போது செய்கிற மாதிரி செய்வது சுயபரிபாலனையற்றதுமானக்கேடானது. இந்த மாதிரி மூடக்கொள்கைகளைக் கண்டுதான் மிஸ். மேயோ ஒரு புத்தகம் எழுதத் துணிந்தார். வெள்ளைக்காரர்களும்நம்மை சுயராஜ்யத்துக்கு இன்னும் லாயக்கில்லை என்கிறார்கள். புராணக் குப்பைகளுக்கு கட்டுப்பட்டு கடலில் ஒரு தூளிபோன்ற கூட்டத்தாருக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிற இந்தியா தேசத்திற்கு வருஷம் எழுபது கோடி ரூபாய் சிலவில் வைத்திருக்கிற ராணுவ பலங்கொண்ட பிரிட்டிஷ் காரர்கள் மறந்து போய் கமிஷனில் இந்தியர்களை நியமிப்பதெனபது அவ்வளவு சுலபமா?

முடிவாக

நமக்குள் நிதியில் லயிக்கையுள்ளவர்கள் பிதுர்க்கள் நினைத்தன்று தங்கள் உற்றார், சுற்றத்தார், தாயாதி, பந்துக்களை தன் சக்திக்கேற்ப வாவழைத்துவந்து சக்தமாய் விடுவாசல் சுத்திசெய்து சம்பிரமமாக சமையல் செய்து படைப்புப்போட்டுபிதுர்க்களை மனத்தில் நியானித்து ஏழை எளியவர்களுக்கும் எதாவது உபசாரம் செய்து போஜனம் அளித்து எல்லோருடனும் உண்டானந்திக்க வேண்டியது. இதிலும் ஒரு விஷயம். அதே கமாய் பிதுர்க்கள் இறந்துபோன நாள் தெரிகிறதில்லை. அதற்காக "மறக்கதற்கு மாலையபக்ஷம்" என்று சொல்லி பாக்கிப் பேரையும் ஏமாற்றி புரோகிதர்கள் மூட்டை கட்டுகிறார். ஆகையால் பிதுர்தினம் தெரிந்தவர்களும், தெரியாதவர்களும் வருஷத்தில் ஏதோ ஒரு நாள் பெற்றோர்களைப் பூஜிக்கலாம். குறிப்பாக பிராமணனுக்கே கொடுக்கவேணும் என்ற கண்டிப்பையே தகர்க்க வேண்டு மென்பதுதான் இக்கட்டுரையின் சாராமாகும்.

ஆனால் அப்படி சிரார்த்தம் செய்பவர்களில் ஏழை மக்களைவிட ஊருக்குப் பெரிய தனக்காரர்கள், பணக்காரர்கள், பெருக்குடி மக்கள், செல்வாக்குடையவர்கள் முன்னணியில் நின்றால் வெகு சீக்கிரத்தில் 'சுயமரியாதை' பரவிவிடும்.

அந்தக் காலமும் சமீபத்திலிருப்பதாகவே நம்புகிறேன்.

க. வா. வெங்கிடாசலம் பிள்ளை.

பார்ப்பனீயம்
மாண்டால் பூலோகம்
இருள் சூழுமோ?

(6ம் பக்கத் தொடர்ச்சி)

யமையாது வேண்டுமட்டுந் தான் இவ்வியக்கங்கள் நிலவும்; தாம் மேற்கொண்ட பணியைச்செவ்வனே ஆற்றியபிறகு இவ்வியக்கங்கள் தாமே மறைந்துவிடும். அஞ்ஞான்று இரு வென்று சொன்னாலும் அவை தங்கா. இஞ்ஞான்று போவென்று கூக்குரலிட்டாலும் அவை போகா. இஃதியற்கை யன்னையின் ஒரு கூறு. பதினாறண்டளவையில் ஓரிளஞ்ஞன் தனக்குப் பற்கள் வேண்டாமென்று விருப்பினால் அவை வாராதிருக்குங்கொல்? அற்றன்றி நாறியாண்டு நிறைவப் பெற்ற தொண்டு கிழவன் முத்தன்ன வெண்ணகை யரும்புதற்குப் பற்கள் வேண்டுமென்றால் அவை வருங்கொல்?

"வருந்தி யழைத்தாலும் வாராத வரா பொருந்துவன போமினென்றாற் போகா" என்னும் அவ்வையாரது அருள் வாக்கை யோர்மின். இவையெல்லாம் காலத்தின் போக்கு அது நிற்க

இத்தகைய இயற்கை யியக்கங்களைத் தமது பேச்சாலும், தந்திரத்தினாலும், செல்வாக்காலும், சாத்திரத்தினாலும், புராணத்தாலும் அழித்து விடலாம் என்று இறுமாந்திருக்கின்றவர்கள், கடற்கரையில் மலையுயரம் கிளம்பி, ஓயாது கரைகளில் மோதும் அலைகளை; மீண்டும் மோதா வண்ணம் விளக்குமாற்றினால் அகலத் தள்ளி விடுவேன் என்று இறுமாந்து, ஒரு நாள் முழுதும் ஆண்டிருந்து இறுதியில் பேரலையினால் விழுங்கப்பட்ட ஒரு கிழவியின் கதையை நினைவு கூறட்டும். உண்மையாகவே, அண்ணாந்து பார்த்தும் உச்சி கம்கட்புலன்களுக் கெட்டாத மலை போன்ற பெரிய திருவாரூர்த் தேர் இலட்சக் கணக்கான மக்களால் இழுக்கப்பட்டுப் பெரிய ஆரவாரத்துடன் பையப்பைய ஊர்ந்து வருகின்றது. அதனை நிறுத்த யாராலும் முடியாது. உமக்கு உய்வுண்டேல் நீரும் சென்று தேரின் பெரிய வட்டத்தினைப் பற்றி, அதன் இயக்கத்தினைத் தாிதப்படுத்தி, நிலைக்குக் கொண்டுவந்து நிறுத்துங்கள். விருப்ப மின்றேல், வாய்வாளாமை மேற்கொண்டு சேய்மையில் அகன்று நின்மின். அவ்வாறின்றி, தேரின் இயக்கத்தை யாம் தடை செய்யவல்லோம் என்று இறுமாந்து குருக்கே எருவீரேல், அதன் கீழுள்ள பெரிய இருப்பு உருளைகட்கிடையே சிக்கி, நசுங்கி நாசமடைவது திண்ணம்; உண்மை சத்தியம்.

ஆகா, பெரியோர் சென்ற வழியாம்; சாத்திரங்களாம்; புராணங்களாம்; வேதமாம்; மனுதர்மமாம், தீட்டாம்; தீண்டாமையாம். ஆம், சபிக்கப்பட்ட நமது நாட்டில் வெகுகாலமாகவே பழமை கொண்டாடுதல் பெரு வழக்கமாயிருக்கின்றது. பழமை கொண்டாட வேண்டாமென்று நாம் இப்போது கூறவில்லை. முன்பு கூறியபடியே ஒரு நூலாதல் ஓர் இயக்கமாதல், ஒரு கொள்கையாதல், அவ்வக்காலத்துக்குத்தக இயங்கி நிலவும் ஆனால் பின்னொரு காலத்தில், அவைகள் வேண்டாதவாறு கால நிலையும், மக்கள் அறிவும் அமையினும் அமை

மைடான்டெவ்லி தபால் இலாகா அறிக்கை

மைடான் தபால் தலைமை அதிகாரி 31—12—27 ல் எமக்குப்பின் வருமாறு தெரிவித்துள்ளார்:— "1928 ம் ஆண்டு ஜனவரிமாதம் முதற்தேதியிலிருந்து சிலோனுக்கும், பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் மணியார்டர் மூலம் பணம் அனுப்பலாம் என்று தெரிவிப்பதுடன் ஆதிஇந்தியர் அனைவருக்கும் இவ்விடயத்தைத் தெரிவிப்பீர்க ளென்றும் நம்புகிறோம்" இம்முறையானது நம்மவரனைவருக்கும் நன்மை பயக்கு மென்று குறிப்பிடத்தக்க தாகும். க. கு. மு

சோமசுந்திரம் செட்டியார்

மெஸ்ஸர்ஸ் எட்வர்டு அண் கம்பேனியார்

மதராஸ் சைனுபஜார் ரோட்டில் 178, 179-ம் நம்பர்கட்டிடத்தில் நகை, ஜவரியாபாரம் ஜனவரி 25 தேதி ஆரம்பித்து நடத்தி வருவதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

யும். ஆனால், இந்நாட்டங்களெல்லாம் புறக்கணித்து, எது எக்கேடுறினுஞ் சரியே, பழைய இயக்கம் இஞ்ஞான்றும் வேண்டும் என்று பிடிவாதஞ் செய்யின் அஃதென் பயன விளைத்தற்கு? குறுகிய வடிவினையுடைய எம் தந்தை அணிந்திருந்த மேற்சட்டையை, அவர்பால் வைத்த அன்பால், யாமும் அணியக் கருதினோம். நாம் பெடிது வளர்ந்துள்ளோ மாதலால், அந்தோ! அச்சட்டை எம் முழங்கை அளவிற்கே வந்தது. அதனால் எம் கைகளை முழங்கை யளவிற்குக் குறைத்துவிடுதல்சால்புடைத்தாமாகுமின்கள். அச்சட்டை எம் தந்தையார்க்குப் பயனளித்தது. ஆனால் எமக்கு அது பிடிக்கவில்லை. ஆகையினால், அதனை மரியாதையாக அகல எடுத்து அவர் தம் நினைவிற் கறிகுறியாக வைத்துவிட்டு, எமக்குச்சரியான வேறொரு சட்டை தைத்துக்கொண்டோம். சட்டைகளுக்காக நாம் பிறந்தோமா? அன்றி நமக்காகச் சட்டைகள் இருக்கின்றனவா? அஃதே போல் வருணாசிரம தர்மம், ஜாதிக்கட்டுப்பாடு, தீண்டாமை, மனுதர்ம நூல் முதலானவைகளெல்லாம், நமமுன்னோர்கட்கு நன்மை பயந்திருப்பினும் இருக்கும். ஆனால் அவைகள் இஞ்ஞான்று வேண்டப்படுவன வல்ல. நமக்கு அவை தீமை பயக்கின்றன. அவை, தாம் இருக்கவேண்டிய காலத்திற்குமேல் நின்று நிலவுகின்றன. நம்முன்னோர்களுடைய தாயிற்றே என்று நினைப்போமானால். பொற்கத்தியாயிற்றே என்று தன் கழுத்தை யரிந்து கொண்டவன் கதியை யொக்கும். ஆகவே எமதருமை அன்பர்களே, இப்பண்டைய, ஆபாச வழக்கங்களையெல்லாம் நிர்மூலப் படுத்துங்கள். அங்ஙனஞ் செய்யாது, குரங்குப் பிடியாய் அவைகளைப் பிடித்திருப்பீரேல், அவை, சின்னாட்களில் உங்களை நிர்மூலப் படுத்தும்.

தனவணிகர் நாட்டில் சுயமரியாதை பிரசாரம்.

இம்மதி இரண்டாம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு காரைக்குடி ஆனந்தவல்லி சௌக்கத்தில் திருவாளர் கே. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் காரைக்குடி ஜில்லா பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கம் நிறுவப் பெற்றது. சங்கத்தலைவராக "குமரன்" ஆசிரியர் திருவாளர் சொ. முருகப்பசெட்டியார் அவர்களும் உபதலைவராக திருவாளர் ஆவி. லெ. அருணாசலம் செட்டியார் அவர்களும் காரியதரிசியாக திருவாளர் வெ இராமநாதன் செட்டியார் அவர்களும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

இச்சங்கச் சார்பில் இம்மதி 5ம் நாள் இரவு 7 மணிக்கு புதுவயல் பிள்ளையார்கோவில் பக்கத்தில் சங்க உப தலைவர் ஆவி. லெ. அருணாசலம் செட்டியார் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் கூடிற்று.

அத்தருணம் திருநெல்வேலி திருவாளர் கே. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் 'பார்ப்பனக் கொடுமை' என்னும் பொருள் பற்றியும் திருவாளர் திருவனந்தை ம நடராஜன் அவர்கள் 'சுயமரியாதை இயக்கம்' என்னும் பொருள் பற்றியும் பேசினார்கள்.

பின்னர் திருப்புவனம் திருவாளர் நாராயணசாமி அவர்கள் 'பார்ப்பனர்' நம் சமயத்தின் பேரால் நமமவர்களை ஏமாற்றுவதைக் குறித்தும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்

திருவாளர் வீ. ஜீ. நாயர் அவர்கள் சிறிது நேரம் சுயமரியாதை இயக்கத்தை ஆதரித்துப்பேசினர்.

கடைசியாக தலைவர் அவர்கள் பிராமணர்கள் கொடுமையை நம்மவர் இதுகாறும் உணர்ந்திடாது பொறுத்துக் கொண்டிருந்தோம் என்றும் தற்போது நாம் அக்கொடுமையை நன்கு உணர்ந்து கொண்டதால் இன்று நம் மக்களை ஏமாற்றுது எச்சரிக்கை செய்யவே தென் இந்திய நல உரிமைச்சங்கம் தோன்றியதென்றும் தனவணிக நாட்டில் நிறுவியுள்ள இவ்வியக்கத்திற்கு தலைவராக இருப்பவர் நிவான்பகதூர் அ. மு. முருகப்ப செட்டியார் ஆவர் என்றும் இவர் போன்ற பல பெரியார் தென் நாட்டில் பல பாகங்களிலும் இவ்வியக்கத்தை ஆதரிக்க முன்வந்துள்ளார் என்றும் அரியதோர் சொற்பெருக்கு நிகழ்த்திகேட்டார் மனதை மிகவும் மகிழ்வித்தனர்.

பின்னர் காரியதரிசியவர்களால் நன்றி கூறுதலுடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

வெ. இராமநாதன்.

இனம்! **1928.** இனம்!!

தங்கள் விலாசத்தைத் தெரியப்படுத்தினால் நாங்கள் 1928வரு காலண்டரும் ஆரோக்கிய சமாசாரமும் தபால்செலவின்றித் தங்களுக்கு அனுப்புகிறோம்.

சித்த ஔஷதசாலை கம்பேனி,
போண்டு முல்லச்சேரி, மலபார்

1928-ம் வருஷத்திய

இந்துசமயக் காலண்டர்.

இது தனதனவென ஒளிரும் உயர்ந்த ஆர்ட் பேப்பரில் 20X30 அங்குல அளவில் சிறந்த இரண்டு வர்ணங்களினால் அச்சிடப் பெற்றிருக்கிறது. காலையில் எழுந்தவுடன் தேவதா தரிசனம் செய்வதற்கு இசைந்த வகையில் அமைக்கப்பட்டது.

இதில் அடங்கியுள்ள படங்கள்:—

1 திருமகள்
2 கலைமகள்
3 ஆண்டாள் சூடிப்பார்த்தல்
4 உமை சிவலிங்கத்தைத் தழுவியிருத்தல்
5 பார்வதி பரமேஸ்வரன்
6 மகாவிஷ்ணு
7 ஷண்முகம்
8 பாலகிருஷ்ணன்
9 ராதாகிருஷ்ணன்
10 சிவபெருமான் கங்கையைத் தரித்தல்
11 முருகன் சிவபெருமானுக்கு உபதேசித்[தல்
12 காளிங்கமர்த்தனம்
13 துருவன் அருள்பெறுதல்
14 ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்

ஒவ்வொரு படத்தின் காட்சியும் கண்ணைக் கவரும்!
கருத்தைக் கொள்ளை கொள்ளும்!!
மனதை உருக்கும்!!! பெரு மகிழ்வை ஊட்டும்!!!

விலை அணா 8. தபாற்கூலி வேறு.

இம்பீரியல் டிரேடிங் கம்பெனி,
555, பைகிராப்ட் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

சென்னை பார்ப்பனரல்லாத

வாலிப சங்க டைரி.

இப்பெயர் கொண்ட டைரியொன்று நமது பார்வைக்கு வந்தது. இது ஷெ சங்கத்தாரால் தொகுக்கப்பெற்று வெளியிடப்பட்டது. சாதாரணமாக மற்ற டைரிகளில் காணப்படும் தபால் தந்தி கட்டணம் முதலாய விஷயங்களும், சிறப்பாக ஷெ சங்கத்தின் வரலாறு, டாக்டர் நாயர், தியாகராயர், சுரேந்திரநாதர் ஆகியவர்களின் படங்களும், ஒவ்வொரு இதழிலும் தலைவர்களின் அனுபவ ஆப்த வாக்கியங்களும் மிளிர்கின்றன. ஒவ்வொரு பக்கமும் இரண்டு தேதிகளாக பிரிக்கப்பட்டு, கையில் அடங்கக் கூடியதாய் அழகான காலிக்கோ பயிண்டுடன் விளங்குகிறது. விலை அணா 5. வேண்டுவோர், "சோல்டன் கம்பெனி, 746 திருவல்லிக்கேணி ஹைரோட் மதராஸ் S. E." என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

முத்துலாபுரம் ஸ்டேஷன் மறுப்பு.

8-1-28ல் வெளியான 'குடி அரசில்' ரயில்வே அதிகாரிகளின்சூழ்ச்சி என்ற சமாசாரங்களுக்கு பதில்—

விருதுநகர் தென்காசி ரயில்வே லயினில் சங்கலிங்கபுரம், சங்கரன் கோவில் என இரண்டு ஸ்டேஷன்களின் பெயர்கள் சிறுபான்மை ஒத்து இருப்பதால், பிரயாணிகள் தவறுக டிக்கட்டுகள் பெற்றுக் கொண்டு இறங்குமிடத்தில் அபராதம் கொடுக்கின்றனர். மற்றும் கூட்ஸ் பார்சல்கள் முதலான வைகளும் ஷெ மாறுதல்கள் அடைகின்றன. இவ்விதம் மாறுதல்கள் ஆகாவண்ணம் வேறு பெயர் உள்ள ஸ்டேஷனுக்கு சமீபத்திலுள்ள ½ மைல் தூரங்கொண்ட முத்துலாபுரம் என்ற கிராமத்தைப்பற்றி தெரிவித்தோம். இதை நன்பர் செட்டியாரவர்கள், நாங்கள் ரெயில்வே அதிகாரிகளின் சொல்லில் மயங்கினவர்களென்றும், பணம் பறி கொடுத்தவர்களென்றும், எழுதியதோடு அரை மைல் தூரமுள்ள முத்துலாபுரம் கிராமத்தை ஒன்றரை மைல் தூரமிருக்கின்றதெனவும், சங்கரலிங்கபுரம் கிராமத்தை விட அதிகமான பெருங்குடும்பங்களமைந்ததுமானதை சிறிய கிராமமென்றும், ஒரு சிறிதும் பொருந்தாது எழுதியது விசனிக்கத்தக்கதாகும் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

பார்ப்பன புரோகிதத்துக்கு சாவு மணி.

தென் ஆற்காடு ஜில்லா செட்டணை கிராமத்தில் புரோகிதர் வருஷவாரி பொங்கல் கழித்ததும் வருவதுபோல் வந்தார். சுயமரியாதை ஏற்பட்ட பின்பு இவ்வருஷம் தக்ஷணை இல்லாமல் புரோகிதர்களுக்கு தாம்பூலம் கொடுத்தார்கள். ஆதலால் அன்று புரோகிதர்களுக்கு கிடைக்கக்கூடிய சுமார் பதினைந்து ரூபாய் வருமானம் கிடைக்கவில்லை. இதனால்பார்ப்பனச் சேரியில் உள்ள சில பார்ப்பனர் கூடி இவ்வூருக்கு 'குடி

கனம் டிப்டி ரிஜிஸ்ட்ரரா

சி. ஏ. நாயகம்

அவர்களுக்கு,

பன்ருட்டி கோவாபரேட்டிவ் பாங்க் மெம்பர்கள் மகாசபைக் கூட்டத்தில் அளித்த

வந்தேறுபசார பத்திரம்.

ஐக்கிய உருவே! தாங்கள் இந்த 5-வது வட்டத்தில உத்தியோகத்தை ஏற்றபின் ஐக்கியர்களுக்குள்ள சில பிணக்குகளே தீர்த்து ஐக்கியமுறை நாட்டில் பரவுவதற்கும் ஏழை மக்கள் அதனால் பல நன்மையடைவதற்கும் போதிய முயற்சி எடுத்து வேலை செய்து வருவது எங்களுக்கு மகிழ்ச்சியை தருகிறது. ஸ்தாபிக்கும் சங்கம் யாருக்காக ஏற்படுகிறதோ அவர்களின் பூரா சம்மதத்தையும் பெற்ற பிறகே ஸ்தாபிக்கும் விஷயத்தில் தங்கள் உத்தியோக வர்க்கத்தைச் சேர்ந்தவர்களில் தாங்கள் ஆழ்ந்த நோக்கம் கொண்டவர்கள் என்று நாங்கள் தங்களிடம் பழகிய அநுபவத்தால் தெரிந்திருக்கிறோம். இவ்வித அஸ்திவாரத்துடன் ஏற்படும் சங்கமே தன் கொள்கையை நிறைவேற்ற ஆற்றலுடையதாகும்.

ஓ ஐக்கிய தத்துவ நாயக! தாங்கள் பண்டைத்தமிழ் வாழ்க்கையை நவ நாகரீகத்துடன் கலந்து அனுஷ்டிப்பதோடல்லாமல் ஏனையோரையும் அவ்வழியிலேயே பழக்கி அதிலும் ஐக்கிய கொள்கையை விருத்திக்கு கொண்டு வருவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். எத்துறையிலும் ஐக்கியத்தைப் புகுத்துவதில் முயற்சியுடைய தங்களை ஐக்கிய உருவே என்று அழைப்பது மிகையாகாது.

ஏழைபங்காளா! தங்களுக்கு ஈண்ட ஆயுளையும் ஐக்கிய முறையில் ஏழைகளை முன்னுக்கு கொண்டுவருவதில் தளரா ஊக்கத்தையும் மேன்மேலும் கொடுக்கும்படி கடவுளைப்பிரார்த்திக்கிறோம். இம்மகாசபையில் தாங்கள் விஜயம் செய்திருப்பது எங்களுக்கு களிப்பைத் தருகிறது. தங்கள் வரவு நல்வரவாகுக.

பன்ருட்டி, 6—1—28 } S. G. தேவானந்தன், காரியதரிசி.

அரசு' 2ம் 'திராவிடனும்' வருகிறது இவைகளை படித்துவிட்டு நம்மை மதிக்காமல் பேசுவதும் பார்க்கும்போது கும்பிடாமல் போவதும் அதிகரித்து விட்டது. பிராமணனுக்கு மரியாதை செய்வதும் இல்லை. ஆகையால் நாளைக்கு காரியத்துக்கு போனால் அவமரியாதை செய்வார்கள் என்றெண்ணி வராமல் நின்று விட்டார்கள். அவ்வூர் ஸ்ரீமான் காளாஸ்த்திரி செட்டியாரின் கருமகாரியம் தை மாதம் 5-தேதி நடந்தது. இதற்கும் பிராமண புரோகிதரை விலக்கியே நடத்தினர்கள். இது ஊரில் உள்ள பார்ப்பனரல்லாதவர்களுக்கு மிக்க மகிழ்ச்சியைத்தந்தது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

தமிழ் தரும வைத்தியசாலை

சென்னை தங்கசாலைத் தெரு சுமதாங்கிக்கு வடக்கில் 221 ஆம் எண் வீட்டில் காலை 7 மணி முதல் 10 மணி வரையில் ஏழை நோயர்கட்கு தருமமாகமருந்துகொடுக்கப்படும்

பெண்களுக்கு வைத்தியம் செய்ய பெண் வைத்தியர் (லேடி டாக்டர்) வைத்தியசாலையிலிருக்கின்றார்

பிள்ளைப்பேறு(பிரசவம்)பார்ப்பதற்குமருத்துவச்சி எந்த நேரத்திலும் அனுப்பப்படும்.

சுதேச சமஸ்தானங்களில் எமது முன்னோர்கள் பரம்பரையாய்க் கையாண்டு வந்த மிக உயர்ந்த சித்த மருந்துகள்எங்கள் தமிழ் மருத்துவசாலையில் தயாரிக்கப்படுகின்றன. எங்கள் மருந்துகளின் பெருமையை நாங்களே புகழ்ந்து கூறுகின்றோமெனக் கருத வேண்டாம் எங்கள் மருந்துகளை அனுபவித்துப்பார்த்து பல ஆசர்கள் ஜெமீன்தார்கள், ஹைகோர்ட் ஜட்ஜுகள் ஆங்கில வைத்திய நிபுணர்கள் முதலியோர் புகழ்ந்தெழுதியிருக்கின்றார்கள். அவைகளை எங்கள்மருந்து விவரப்புத்தகத்தில் (கேட்லாக்கில்) காண்க,

உயர்ந்த செந்தூரங்கள், பஸ்பங்கள், சுன்னங்கள், குளிகைகள், மாத்திரைகள், இலேகியங்கள், சூரணங்கள், கிருதங்கள், தைலங்கள் முதலிய சித்த மருந்துகள் தமிழ்மருத்துவசாலையில் காலை 7 மணி முதல் இரவு 8 மணி வரையில் விலைக்குக்கிடைக்கும்-

மருத்துவஞாயிறு (வைத்திய பாஸ்கர)
பண்டித எஸ். எஸ். ஆனந்தம்,
தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலைத்தெரு, சென்னை-

சென்னையில்

"குடி அரசு"

கிடைக்கும்
முக்கியமான இடங்கள்.

1. முனுசாமி, ஜெனரல்பியூஸ் ஏஜென்ஸி பிராட்வே கார்னர்.
2. K. கண்ணன்—நியூஸ் ஏஜென்ஸி கோவிந்தப்ப நாயக்கன் தெருவு,
3. குப்புசாமி பிள்ளை வெத்திலை பாக்கு கடை, யானை கௌனி.
4. ஷண்முக முதலி, அரிசி வியாபாரம், புரசைவாக்கம்.
5. ஏத்திராஜ முதலி, வெத்திலைபாக்கு கடை, திருவல்லிக்கேணி.
6. ஜெகநாதமுதலி, பல்" ஸ்டேண்டு புரசைவாக்கம்.
7. 'திராவிடன்' ஆபீஸ், மவுண்ட் ரோடு.

செந்தமிழ்ச் செல்வி.

(6 வது ஆண்டு)

ஓர் உயர்ந்த செந்தமிழ் மாதப் பத்திரிகை.

10—2—28 முதல் வெளிவருகின்றது.

இதற்குப்

(1) பல்லாவரம் சுவாமி வேதாசலம், (2) திரு கா. சுப்பிரமணிய பிள்ளை எம். எ., எம். எல். (3) திரு பா. வே மாணிக்க நாய்க்கர், பி. இ. (4) திரு எஸ், அனவரத விநாயகம் பிள்ளை, எம். எ., எல். டி. (5) திரு க. ப. சந்தோஷம், பி. எ., எல். டி., முதலிய பேரறிஞர்கள் கட்டுரை எழுதிவருகின்றார்கள்.

80 பக்கமடங்கிய மாதிரிப்பிரதியை $2\frac{1}{2}$ அணை தபாற்தலையனுப்பிப் பெறுக

விரிவான புத்தக விளம்பரம் இனம்

விபவ ரௌத்ர பஞ்சாங்கம்.

தபால்கூலியுட்பட

ரப் அரை 2 கிலேஷ் அணை $2\frac{1}{2}$

"செந்தமிழ்ச் செல்வி" நிலையம்,

6, பஜனக்காரத் தெரு, சென்னை.

(-3ம் பக்கத் தொடர்ச்சி)

ராகி உங்கள் பகிஷ்காரத்தின் திறமையை இப் பொழுதே உங்கள் தலைவர்கள் சொல்லிவிடட்டும்.

ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லி வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன். இதை உங்கள் தலைவர்கள் கவனிக்கவேண்டும். காங்கிரஸ்காரர்கள் சென்னையில் டிஷ்காரப் பிரசாரம் செய்துவருவது உங்களுக்குத் தெரியும்"யாராவது கவர்னர் அரண்மனைக்கு கமிஷனைப் பார்க்கப் போனால் நாங்கள் எல்லா விதத்திலும் வழிமறிப் போம். பரிகாசம் பண்ணுவோம். வழியில் படுத்துக்கொள்ளுவோம்" என்று ஸ்ரீ சத்தியமூர்த்தியய்யர் சொல்லுகிறார். அதற்காக வாலண்டியர் படையும் திரட்டுகிறார்கள். வருஷ ஒப்பந்தக் கூலிகள் எழுட்டுபோக சிலருக்கு ஒன்றே இரண்டோ கொடுத்து கள்ளை அவர்கட்கு ஊற்றி கல்லெறியவும், திட்டவும், வழியில் குறுக்கே நிற்கவும், செய்வார்கள். இந்த இடத்தில் நீங்கள் கவனிக்க வேண்டியவை சிலவிருக்கின்றன. உங்கள் சமூகத்திலிருந்து யாரும் கூலி வாங்கி அவர்களுடன் போகாமல் கூட்டம் போட்டுத் தடுத்து விடவேண்டும். உங்கள் சமூகமெல்லாம் உங்கள் தலைவர்களுடன் போக யேற்பாடு செய்யவேண்டும். கையாலும் சர்க்கார் பயத்தாலும் காலிகளை அகற்றவேண்டும். காங்கிரஸ் கொள்கையில் சத்தியமாகவும், ஞாயமாகவும் கூலி வாங்காப் பற்று தலுடைய பொறுப்பேற்றவர்கள் மறியலுக்கு வந்தால அவர்களிடம் உங்கள் ஞாயங்களையும் மற்றவர்கள் இழைக்கும் தீங்குகளையும் சொல்லி பரிகாரம் தேடவே போகிறோம் என்று சொல்லுங்கள். அவர்கள் ஒத்துக்கொள்ளுவார்கள். கூலிக்கு வந்து வழியில் படுத்துக் கொண்டால் அவன் பேரில் வண்டியை ஓட்டாமல் அவனைத் தூக்கி போலீசுக்கு அனுப்புங்கள். வருஷ ஒப்பந்தம், மாதக்கூலி, தினக்கூலி வழி மறிக்கக்கூலி, பெருமைக்கூலி, கல்லெறிய திட்ட பரிகாசம் பணக்கூலி பெற்ற இத்தனை பேர்களையும் எவ்விடாமல் காங்கிரஸ் பகிஷ்கார பிரசார மேடையில் வீரம் பேசும் வீரர்கள் சொன்னது போல சொன்னவர்களே வழியில் படுத்துக்கொண்டால் எச்சரிக்கை செய்து விட்டு அவர்களையும் அகற்றுங்கள் வஞ்சனையால் உங்களைக்கெடுக்க வந்து படுப்பவர்களை விட நீங்களே பின்னல் பெருமையடைவீர்கள்.

மின்சார ரசம்.

சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம்.

பத்தியமில்லை! அநுபானமில்லை!

மின்சார ரசம். மின்சார ரசம்.

இதற்கு இயற்கையாகவே ஒருவித மின்சார சக்தியுண்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம். மனிதன் தலைமுதல் கால் வரையில் வரும் எல்லை ரோகங்களுக்கும் தேவாமிருதம் போன்ற தென்பது ஜகத் பிரசித்தம். பலரின் அநுபவம். கைகண்ட மருந்து.

எச்சரிக்கை:- பிஜிஸ் டான டிரேட்மார்க்

தளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும். டாக்டர்களை தேட வேண்டியதில்லை. உங்கள் காலத்தையும் சிரமத்தையும், பணத்தையும் மிச்சப்படுத்தும். ஆயிரக்கணக்கான நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றது.

உண்மை யறிய ஒரே முறை பரீக்ஷியுங்கள்! கேட்லாக் இலவம்.

உங்களை தூச்சரியமுறச் செய்யும்! இன்றைக்கே எழுதுங்கள்.

ஒரு புட்டியின் விலை ரூ. 2. தபாற் செலவு வேறு.

விலாசம்:- மின்சார ரசம் கம்பெனி Ltd., சேலம்.

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள் } மெசர்ஸ். T. N. சோக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ். இங்கிலீஷ் மருந்து ஷாப், வடக்குசித்திரை வீதி, மதுரை.

திருப்பூர் கதர் பனியன்கள்.

குளிர்காலத்துக்குத் தகுந்த உபயோகமானவைகள்.

நம்மிடம் உறுதியானதும் நீடித்து உழைக்கக்கூடியதுமான சுத்த கதர் பனியன்கள் கிடைக்கும்.

விலை டஜன் 1-க்கு

28 இஞ்சு 7-14-0 30 இஞ்சு 8-4-0, 32 இஞ்சு 8-10-0 34 இஞ்சு 9-0-0.

உடனே வேண்டிய பனியன்களுக்கு ஆர்டர் செய்யுங்கள். இன்னும் மற்ற எல்லா விதமானகதர்ஜவுளிதினுசுகளும் கிடைக்கும். விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

M. V. கருப்பண்ணசெட்டியார், திருப்பூர், (தென் இந்தியா)

அறிக்கை.

ஜவுளி ஜரிகை வியாபாரிகளுக்கு

எங்களிடம் பிரான்சி 8 லடி ரங்குள்ள ஜரிகை மார்க்குகளும் பாம்பே குவால்டி 8 லடி ரங்கு சரிகை மார்க்குகளும் சூரத்பட்டு கயிர்கட்டின அதிக ரங்குள்ள கும்பி ரங்குகள் மார்க்குகள் தயாரிலிருக்கிறது. இத்துடன் உள்ளூரில் தயாராகும்படியான ஜவுளிதினுசுகளில் வெள்ளை 100 நெம்பர் முதல் 200 நெம்பர் வரை நூல்களில் 5, 6 முழம் சதுரம் ஜரிகை ருமால்களும் டை நெம்பர்களில் 2-½ முழம் அகலம் 6 முழம் பலவிதமான சவீன கொடி பேட்ரகங்களில் ஜரிகை துப்டாக்களும் தனிப்பட்டும், பட்டும் நூலும் கலந்த பலவிதமான இங்கிலீஸ் பேன்ஸி சிகப்பு ரோஸ் கலர்களில் 2-½ அகலம் 18 முழம் நீளம் பல விதமான பேட்கரையும் ஜரிகை முந்தாணியுள்ள சேலை ரகங்களும் டை கண்ட ரகங்களில் 6 முழம் ரவிக்கை தினுசுகளும் பேட்டா தினுசுகளும தயாரிலிருப்பதால் தேவையுள்ளவர்கள் எழுதினால் விலை ஜாப்தா அனுப்பப்படும்.

சி. லிங்கி செட்டி, S. வெங்கிட்டராம செட்டி,

ஜவுளி & ஜரிகை வியாபாரம், கோயமுத்தூர்.

மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd

ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து ஷே கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பக்ட்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.

சிருங்காரமான போட்டோ படங்கள்.

பாரிஸ் மாதர்கள், ஐரோப்பிய மாதர்கள் முதலோரின் அழகையும், அவர்களின் விநோத நடை உடை பாவனைகளையும் விளக்கும் போட்டோ கார்டுகள் படுக்கையறையைச் சிறப்பிக்க ஒவ்வொரு வீட்டிலும் முக்கியமானவை. படங்களைப் பார்க்கப்பார்க்கப் பேரின்பம். உயர்ந்த கலர் கினேஸ் படங்கள். பல ரகங்கள் கொண்ட டஜன் கார்டுகள் விலை ரூ. 1-15-0.

ப்ரேஞ்சு வாசனைக் கார்டுகள்.

வாசனைப் புட்டி வேண்டுமென்ற அவசியமில்லை. எப்பொழுதும் உயர்ந்த வாசனையோடு கூடிய ஷே கார்டுகள் டஜன் ரூ. 1 தான்.

தி: கிருஷ்ணா ஏஜன்சி,
26, வெள்ளாளத் தெரு, புரசபாகம், மதராஸ்.

கடிகாரங்கள்

இனம்! 1928-ஆம் காலண்டர் இனம்!
துப்புரவான வேலைகள்.

எங்கள் சொந்த பார்வையில் தயார் செய்யப்படும் சொக்க வெள்ளி தண்டை, கொலுசு செயின், அரைஞாக்கொடி, கெங்காதரக் கொடி, பீலி வகையறாக்களும், இமிடேசன் சிகப்பு கம்மல், கடுக்கன், தோடு வகைகளும், அசல்பட்டு ஜரிகை பேட்டு வேலைமானம் பட்டு லேஞ்சுகளும், வெண்பட்டுவகையறாக்களும் இமிடேசன் பட்டு சேலை, ரவிக்கை, டாவினி 1, 2, 3 வே. லேஞ்சுகளும், இன்னும் பலவித தினுசுகளும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு விலைகளை குறைத்து இருக்கிறோம். வேண்டியதற்கு ஆர்டர் எழுதினால் உடனுக்குடன் வி. பி. யில் அனுப்பி வைக்கிறோம். விபரம் வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும்

விலாசம்,
தொ. வெ. சென்னி செட்டி & சன்ஸ்
சராப் & ஜவுளி வியாபாரம்
குகை, சேலம். (S. India)

தந்தி விலாசம்
"சராப்" சேலம்

டேபில் டைம்பீஸ் இனம்!!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில்வைக்கக்கூடியதொரு அழகான டேபில் டயம் பீஸ் இனமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூக்குக்கள் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.



வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு ஆர்டர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. பான்கர் வாட்சு ஹவுஸ்,
15 A-பீட். ஜி. டி மதராஸ்.

விளம்பரம்.

வியாபாரிகளே!

உங்களுடைய வியாபாரம் செழிப்பாக நடக்க வேண்டுமா? அப்படியானால் நீங்கள் முக்கியமான பத்திரிகைகளில் விளம்பரம் செய்தல்வேண்டும். உங்களுடைய விளம்பரத்தை எங்களிடம் அனுப்புங்கள். நாங்கள் அதை எப்படி எழுதினால் ஜனங்களின் மனதைக் கவர்ச்சி செய்யுமோ அந்த வழியில் எழுதி அழகாகப் பிரசுரிப்போம் குறைந்த விதிதம் வேண்டுமானால் நீங்கள் எங்களுக்குத் தான் எழுத வேண்டும். வியாபாரத்திற் கழகு விளம்பரம் செய்வதே

வர்ல்ட் அட்வர்டைஸிங் சர்விஸ்,
தபால் பேட்டி 119, மதராஸ்.

தமிழ் நாட்டில் சுமார் 2,50,000 இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக் கொடுத்தும், இதைப்போன்ற அநேக புத்தகங்கள் பின்னால் பணம் பறிக்கும் பொருட்டு அநேகரால்தயார்செய்யப்பட்டாலும் முதன் முதல் வெளிவந்ததும், நிகரற்றதும், நற்சாட்சியும், ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும், சென்னை சட்டசபை வித்யா இலாகா மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரிடமிருந்து உயர்ந்த நற்சாட்சிப் பத்திரம் வாங்கப் பட்டதுமான எமது ரிஜிஸ்டர்டு லேடி டிரேட்மார்க் போட்டுள்ள

ஆங்கில ஆசான் (ஒன்பதாம் பதிப்பு)

வெளி வந்து சுமார் 2000 காப்பிகள் இரண்டு வாரங்களுக்குள் பறந்துபோய்விட்டன. உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இது ஒன்று சான். இது மாதர்களுக்கும் வியாபாரிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் மிகவும் முக்கியமானது. இப்பதிப்பில் மிகவும்சிரமப்பட்டு அனுமுதல் 3,000 ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்குப் போடப்பட்டிருக்கிறது. எங்கள் ஆங்கில ஆசானைப்போல் பலபோலிப் புத்தகங்கள் வெளிவந்துள்ளன. ஆங்கில ஆசான் என்ற பெயர் டார்த்தும் இப்படத்தில் காட்டியுள்ளபடி டிரேட்மார்க் இருக்கிறதா வென்று கவனித்தும் புத்தகம் வாங்குங்கள். உண்மையான ஆங்கில ஆசான்

800 பக்கம் முழு காலிகோபைண்டு விலை ரூபாய் 2 வி. பி. தபால் செலவு அணா 8

தி. இராஜகோபால் முதலியார், 302 தங்கசாலைத் தெரு, மதராஸ்

காலத்திற்கேற்ற நூல்! காதலர்கள் தேடும் நூல்!!

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

அழகான பைண்டு. சுமார் 400-பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம் நேர்த்தியான அச்சு.

நல்ல இனிய காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அரிய அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

1. திருமணத்தின் கதி யென்ன?
2. இல்வாழ்க்கை என் சிறந்தது?
3. இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி?
4. இல்வாழ்க்கையின் இரகசியத்தை யறியாதார் படும்பாடு.
5. பெண்ணின் பெருமை. பெண்கல்வி.
6. ஞானம் எப்படி உண்டாயிற்று?
7. உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம்.
8. நாம் ஏன் உடைதரிக்கவேண்டும்?
9. நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன?
10. இக்காலத்தில் எத்தனைபேர் நிர்வாணமாயிருக்கின்றனர்?
11. ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன? உண்மையான கலியாணம் எது?
12. காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
13. சாந்தி முகூர்த்தத்தில் எப்படி வெற்றியடைவது?
14. மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
15. கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?
16. தமக்குச்சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்ற எப்படிக் கண்டுகொள்வது?
17. ஸ்திரீகளுக்கு எப்பெப்பொழுது காமம் உண்டாகிறது?
18. அவர்களிடத்தில் ஆபிரதங்கள் எக்கெக்கே இருக்கிறது? அதை எப்படி யறியலாம்?
19. பலஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
20. சந்தமம் செய்யவேண்டிய காலமும் நாழிகையும்.
21. ருதுவாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?
22. பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்கு காரணம். இதைப்போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
23. மனம் போல் மக்களைப் பெறும் தூய உபாயங்கள்.
24. கருவிலிருப்பது ஆண் பெண்ணு என்று எப்படி அறிந்து கொள்வது?
25. கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்து கொள்ளவேண்டிய முறைகள்.
26. கர்ப்பகாலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக்கூடிய வியாதிகள்.
27. அவைகளை போக்கடிக்கும் உபாயங்கள்.
28. முதல் மாதத்திலிருந்து கடைமாதம் வரையில் கருவின் வளர்ச்சித் தத்துவம்.
29. ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப்போக்கடிக்கும் விவரம்.
30. புருஷர்கள் மலடாவதுண்டா? எத்தனை பார்த்தாலும் என் ஆண்மை விசேஷமாயிருக்கிறது? இதைப் போக்கிக்கொள்ளுவ தெப்படி?
31. அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத்தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ, புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமலே குழந்தைகள் பெறாமலே மட்டும் தடுக்க முடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனா, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறாமல் விஷயத்தில் ஜனங்கள் எப்படியான அகிபாயங்கள் செய்கின்றனர்? இக்கொடிய அபிபாயம்.
32. ஒருவன் எத்தனை மாதரை மணம் புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்ந்திருப்பதன் கவனிக்கவேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக் காப்பாற்றிக்கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருடனொருவர் பொறாமை கொள்ளாமலிருக்க வேண்டியதனால் அவன் எப்படி சாபார்த்தியமாய் நடந்து கொள்ளவேண்டும்.
33. தாசிகள் காட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா? தாசிகள் வீடுபோகும் புருஷருக்கு நாம் சொல்லக்கூடிய சில வார்த்தைகள்.

தண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான பொன்போன்ற இரகசிய விஷயங்களோ இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

ஆகையால் நண்பர்களுக்கு நமது வேண்டுகோள் என்னவென்றால் இவ்விளம்பரத்தைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் "இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்னும் எமது புதிய நூலின் ஒரு பிரதியை வருவித்துவாராக. குடும்பஸ்தர் ஒவ்வொருவர் வீட்டிலும் இதன் பிரதியொன்று இருக்கத் தீரவேண்டும். உம்முடைய நண்பர்களிடத்தும் இந்நூலைப் பரப்பி நாட்டிற்கு நன்மைசெய்யுங்கள். இந்நூல் லாபங்கருதி அச்சிட்ட புத்தகமல்ல.

"இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்ற புத்தகம் ஒவ்வொரு ஊரிலுமுள்ள புத்தக வியாபாரியிடமும் கிடைக்கும் அல்லது எங்கள் விலாசத்துக்கு உடனே எழுதவும்.

விலை ரூபாய் 2—0—0.

வாஸன் புஸ்தகசாலை,

தபாற் பெட்டி நெ. 119

97. அன்னைபிள்ளை தெரு, ஜி. டிஃ மதராஸ்.

ஸ்ரீமதி காகம்மாஸாவர்களால், ஸாரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.